Registered as a magazine in Sri Lanka

# நிமிர்வு

ISSN 2579 - 2113

அரசியல் சமூக பொருளாதார செயற்பாட்டிதழ்

facebook.com/nimirvu

www.nimirvu.org

பார்வை – 17 | ஆனி, 2018 | பக்கங்கள் – 24 | விலை – ரூபா 20.00



# நிபந்தனையற்ற விடுதலையே வேண்டும்

## பொது மன்னிப்பும் புனர்வாழ்வும் அல்ல



நுண்கடன் பயனுள்ளதே! ஆனால்...





பதநீர் விற்பனையை மேம்படுத்திய புலம்பெயர் தமிழர்



தமிழர்களின் இருப்பைச் சிதைக்கும் கொழும்பு அரசாங்கம்

ஆராயும் அறிவே நிமிர்வு

# பதநீர் விற்பனையை மேம்படுத்திய புலம்பெயர் தமிழர்




இலங்கையில் கடுமையாக போர் இடம் பெற்ற சமயத்தில் உயிரைக் கையில் பிடித்தபடி நாட்டை விட்டு வெளியேறிய புலம்பெயர் தமிழர்களில் மிகச் சொற்பமானோருக்கு மட்டும் தான் எம் தேசத்தின் மீதான கரிசனை இருக்கிறது. இந்த மாத இதழில் நாங்கள் பார்க்க இருப்பதும், புலம்பெயர்ந்து வாழ்ந்தாலும் எம் தேசத்தின் மீதான கரிசனை, மக்கள் மீதான ஈடுபாடும் அக்கறையும் எள்ளளவும் குறையாத ஒரு நல்ல மனிதத்தை பற்றித் தான். அழகாக பேசுகிறார் சண்முகநாதன் சுகந்தன்.

நாட்டு சூழ்நிலைகள் மோசமடைய 1989 ஆம் ஆண்டு இங்கிருந்து கனடாவுக்கு புலம்பெயர்ந்து இருந்தேன். பின் 2014 ஆம் ஆண்டு பிள்ளைகளை கூட்டி வந்து ஊரை, உறவுகளை காட்ட வேண்டும் என்கிற நோக்கில் தான் இங்கு வந்தேன். இங்கே பிஞ்சு வாழைக்குலை மீது கூட ஒரு ஆபத்தான மருந்தை தெளித்து ஒன்றிரண்டு நாட்களுக்குள் பழுக்க வைத்து விடுகிறார்கள். உயிருக்கே ஆபத்தான இந்த முறைகள் தான் இப்போது எம் தேசத்தில் பெருகியுள்ளன. இயற்கை யிலிருந்து நாம் வேறுபட்டு நாம் எங்கேயோ பயணிக் கிறோம். இந்நிலை மிகவும் ஆபத்தானது.

வரணியில் உள்ள தென்மராட்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி நடாத்தும் வடிசாலையில் இருந்து பனஞ்சாராயம் விநியோகிக்கும் பொறுப்பை செய்து தருமாறு கேட்டார்கள். அதனை நான் எடுத்து செய்ய வேண்டிய முக்கிய காரணம் என்னவெனில், 15 முன்பள்ளிகளுக்கு குறித்த சங்கம் உதவி வருவதோடு 3000 குடும்பங்கள் அதனால் பலன் பெற்று வருகின்றன. வடமாகாணத்தின் தனிச் சொத்தான பனையிலிருந்து வரும் பொருட்களை சரியான முறையில் சந்தைப் படுத்தினால் ஒரு அரசை இயக்குவதற்கு தேவையான வருமானத்தையே அதன் மூலம் பெற்றுக் கொள்ள முடியும் என்கிற உண்மை எனக்கு தெரிய வந்தது. ஆனால், இங்கே அந்த வளத்தை சரியான முறையில் உபயோகிக்கவில்லை என்கிற உண்மையும் தெரிய வந்தது.

கள் உற்பத்தியை சரியான முறையில் விநியோகித் தாலே பெரும் நன்மைகளைப் பெற்றுக் கொள்ளலாம். கள்ளை பெரியதொரு கொள்கலன் ஊர்தியில் எடுத்துச் சென்று வெளிமாவட்டங்களில் விநியோகம் செய்தோம். நல்லபடியாக விற்பனை அமைந்தது. அந்த நேரம் என் மருத்துவ நண்பர் சுரேந்திரகுமார் என்னிடம் கைபேசி யில் தொடர்பு கொண்டு "அமெரிக்காவில் இருந்தும், இந்தியாவில் இருந்தும் நண்பர்கள் வந்திருக்கிறார் கள். அவர்களில் சிலர் பதநீர் கேட்கிறார்கள். அதனை எடுத்து தர முடியுமா எனக் கேட்டார்" அப்போது பதநீர் இங்கு இல்லை. அப்போது பனை அபிவிருத்திச் சபையை சேர்ந்த மூத்த அதிகாரி ஒருவரை அணுகிய போது அவர் கிளிநொச்சியில் இருந்து எடுத்து தந்தார். 15 போத்தல் எடுத்து கொடுத்த போது, அதன் சுவையை அவர்கள் ரசித்து ருசித்து கடைசிச் சொட்டு வரை குடித்துவிட்டு நாளைக்கும் கிடைக்குமா எனக் கேட்டார்கள். அதிலுள்ள போசணைக் கூறுகளை மருத்துவர் விளங்கப்படுத்தினார். அதனை பின் இணையத்தில் தேடிப் பார்த்த போது ஒரு குழந்தைக்கு தேவையான போசணைக் கூறுகளில் பெரும்பாலானவை பதநீரில் இருப்பதனை அறிய முடிந் தது. அந்த நேரம் தான் நாங்கள் இதனை எவ்வாறு வர்த்தக நோக்கில் பரவலாக விற்பனை செய்யலாம் என யோசிக்கத் தொடங்கினோம்.

பனை அபிவிருத்திச் சபையின் ஓய்வுபெற்ற அதி காரியான தியாகராஜா பன்னீர்செல்வம் அவர்கள் எமக்கு தொழிநுட்ப வழிகாட்டியாக விளங்கினார். அவரது அனுபவங்கள் தான் இன்று சீரிய முறையில் பதநீர் உற்பத்தி செய்ய காரணமாக உள்ளது. பல்வேறு மேம் படுத்தல்களை அவர் செய்து தந்துள்ளார். பதநீரை விநியோகம் செய்வது என முடிவெடுத்த பிற்பாடு பல்வேறு சிக்கல்களையும் எதிர்நோக்கினோம். முதலாவது பதநீரை பதப்படுத்தி சந்தைப்படுத்த சரியான போத்தல்கள் இல்லை. போத்தல்களை வைத்து அனுப்ப சரியான பெட்டிகள் இல்லை. முன்னைய காலங்களில் வேறு தேவைகளுக்கு பயன்படுத்திய போத்தல்களைத் தான் மீள உபயோகப்

படுத்திக்கொண்டு இருந்தார்கள். அவற்றை மீள பயன்படுத்தும் போது கூட அதனை சரியான முறையில் கழுவுவதில்லை. இந்தக் குறையைப் போக்குவ தென்றால் பதநீரை புதிய போத்தல்களில் அடைக்க வேண்டிய கட்டாயம் இருந்தது. உடனே கொழும்பு சென்று அதற்கான இடத்தைக் கண்டுபிடித்து புதிய போத்தல் களில் அடைத்து பதநீரை விற்பனை செய்யக் கூடியதாக இருந்தது. சரியான விதத்தில் தகவல்கள் அடங்கிய மக்களைக் கவரும் லேபிள்களையும் உருவாக்கினோம்.

தற்போது பதநீரை பண்டத்தரிப்பு பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கம் மாத்திரமே உற்பத்தி செய்து வருகிறது. மேலும் வடக்கிலுள்ள ஐந்து பனை தென்னை வள கூட்டுறவுச் சங்கங்கள் பதநீரை உற்பத்தி செய்ய முயற்சித்து வருகின்றன. பதநீருக்கான விளம்பர மேம்படுத்தல்கள், விற்பனைகளை எங்கள் குழுவினர் கவனித்து செய்து வருகின்றார்கள். இங்கு ஒவ்வொரு ஊரிலும் உள்ள ஒரு கடையில் பதநீரை கிடைக்க வழிவகை செய்திருக்கிறோம். சிங்கள ஊர்களில் பதநீருக்கு கடும் கிராக்கி உள்ளது. பெரிய பெரிய ஹோட்டல்களில் எல்லாம் பதநீரை அறிமுகப்படுத்தி உள்ளோம். அடுத்த வருட இறுதிக்குள் எல்லா ஊர் களிலும் உள்ள பெரும்பாலான கடைகளில் பதநீர் கிடைக் கும். பதநீரை வருடாந்தம் 8 மாதங்கள் தான் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கும். குறித்த 8 மாதங்களில் பதநீரை சரியாகப் பெற்றாலே மீதி 4 மாதங்களையும் பூர்த்தி செய்ய முடியும். சில சங்கங்களில் பதநீர் உற்பத் தியை மேம்படுத்த புதிய இயந்திரத் தொகுதிகளையும் அறிமுகப்படுத்தி வருகிறோம். எங்களிடம் நல்லதொரு குழுவினர் உள்ளார்கள். அதனால் இந்த விநியோகத் தையும் சிறந்த முறையில் மேற்கொள்ள முடியும் என்கிற நம்பிக்கை உள்ளது. தற்போது பதநீர் VS என்னும் வர்த்தக நாமத்தில் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இங்கு பலர் கள்ளில் இருந்து தான் பதநீர் வருவ தாக நினைக்கிறார்கள். பதநீர் தான் மணித்தியாலங் கள் ஆக ஆக நொதித்து கள்ளாகும். இப்பொழுது நாங்கள் பதநீரை சில பாடசாலைகளுக்கும் விநியோ கித்து வருகிறோம். அது மாணவர் மத்தியில் நல்ல மதிப்பை பெற்று வருகிறது. பதநீரில் உள்ள போசணைக் கூறுகளை ஒருவர் நன்கு அறிவாரானால் எங்களுக்கு இயற்கை தந்த கொடையை ஒரு போதும் வீணாக்க விரும்ப மாட்டார்.

பதநீரைப் போன்று கள்ளுக்கும் மருத்துவ குணமுள்ளது. போதியளவு வழங்கலும் உள்ளது. 1972 ஆம் ஆண்டு 27000 சீவல் தொழிலாளிகள் இருந்துள்ளார்கள். அந்த எண்ணிக்கை குறைந்து குறைந்து வந்து, தற் போது 12000 அளவிலான சீவல் தொழிலாளிகளே இருக் கிறார்கள். அதில் 8000 பேருக்கே வேலை உள்ளது. கடந்த 30 வருடங்களுக்கு மேலாக எங்கள் மண்ணின் முக்கிய தொழில்துறை ஒன்று கொஞ்சம் கொஞ்சமாக அழிந்து வருவது தொடர்பில் யாரும் அக்கறை செலுத்து வதாக தெரியவில்லை. கூட்டுறவு சங்கங்கள் இவ்வளவு நாளும் என்ன முறைகளில் கள்ளை பொதியிடுகிறார் கள், விநியோகம் செய்கிறார்கள் என்பதை கவனித்த போது பல பிழையான நடவடிக்கைகளும் சில சரியான நடவடிக்கைகளும் இருந்தன. ஆனால், கள்ளிலோ, பதநீரிலோ கலப்படம் செய்யக்கூடாது என்ற தனிக் கொள்கை வடமாகாணத்தில் இருந்தது. கள்ளில் நாங்கள் மூன்று அளவுகளிலாலான 200 ml, 330 ml, 625 ml போத்தல்களில் அடைத்து சந்தைப்படுத்தி வருகிறோம். அதிலும் இருவகைகள் உள்ளன. அல்ககோல் 3 பிளஸ் அல்லது மைனஸ், 5 பிளஸ் அல்லது மைனஸ். (கள்ளிறக் கும் கால அளவுகளை பொறுத்து இது மாறுபடும்.) சாதாரண கடைகளில் இருந்து சுப்பர் மார்க்கெட்டுக்கள் வரையும் இதற்கு நல்ல சந்தை வாய்ப்பு உள்ளது. ஆடம்பர ஹோட்டல்களிலும் கள்ளுக்கு தனி வரவேற்பு உள்ளது.

இன்று வரைக்கும் கள்ளை பெரிதாக யாரும் குளிர்சாதனப் பெட்டியில் வைத்துக் குடித்ததில்லை. இங்கே நாங்கள் பதநீரை, கள்ளை பலரிடம் குடிக்க கொடுத்து அவர்களின் கருத்துக்களையும் பெற்றுக் கொண்டுள்ளோம். அவை தான் எங்களுக்கு தொய்வில்லாமல் செய்வதற் கான ஊக்கியாக அமைந்துள்ளது. திடீரென வெப்பப் படுத்தி பின் திடீரென குளிர்விக்க வேண்டும். 80 பாகையில் 30 நிமிடம் அவிக்க வேண்டும். பிறகு குளிர் நிலைக்கு கொண்டுவர வேண்டும். ஒருநாளைக்கு பனையிலிருந்து 3 லீட்டர் இலிருந்து 5 லீட்டர் கள்ளு எடுக்க முடியும். இங்கு அரச சேவையில் இருக்கும் ஒருவர் கூட ஆயிரம் ரூபாயில் இருந்து மூவாயிரம் ரூபாய் வரையே பெரும்பாலும் உழைக்கின்றனர். ஆனால் சீவல் தொழிலாளிகள் பலர் 3000 ரூபாயில் இருந்து 7000 ரூபாய் வரைக்கும் ஒரு நாள் உழைக்கின்றனர். பனை ஏறும் தொழிலை சாதிக்கானதாக மட்டும் பார்க்காமல் இதனை ஒரு உயர் பொருளாதாரம் மிக்க தொழிலாக அனைவரும் பார்க்க வேண்டும். முன்னைய காலங்களில் பாரம்பரிய முறைப்படியே பனைகளில் ஏறி வந்தனர். ஆனால் தற்போது பனை ஏறுவதற்குரிய இயந்திரங்கள் வந்துள்ளன. அதன் மூலம் பனை ஏறும் தொழிலை நவீன முறையில் பாதுகாப்பாக மேற்கொள்ள முடியும். இதனால் இன்னும் கூடுதலான பனைகளில் இருந்து கள்ளை, பதநீரை விரைவாக இறக்க முடியும். அடுத்து பனம் பாணியை விநியோகம் செய்ய இருக்கிறோம். அதற்கும் மக்கள் மத்தியில் நல்ல மதிப்பு உண்டு என்றார்.

உடலுக்கு குளிர்ச்சியும், வலிமையும், ஊட்டச் சத்தும் நிறைந்த பதநீர் பனையின் மிக முக்கிய பொரு ளாகும். அந்த காலத்தைச் சேர்ந்தவர்களுக்கு பதநீர் எப்படி உருவாகுகிறது என்பது தெரியும். ஆனால் இக்கால தலைமுறையினருக்கு தெரியவாய்ப்பில்லை. பதநீரில் சுக்ரோஸ் அதிக அளவு காணப்படுவதால் விரைவில் நொதித்து விடும். இலங்கையின் யாழ்குடாநாட்டிலும்

(20 ஆம் பக்கம் பார்க்கவும்)

தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.

நிமிர்வு

மின்னஞ்சல் : nimirvueditor@gmail.com
இணையம் : www.nimirvu.org
தொலைபேசி இல : 021 223 2121

## ஆசிரியர் பார்வை

# வரைமுறையின்றி சூறையாடப்படும் தாயகக் கடல்வளம்

கடந்த போர்க் காலங்களில் பாதுகாக்கப்பட்டு வந்த எமது தாயகப் பிரதேசத்து கடல் வளம் இன்று வரைமுறையின்றி கொள்ளையடிக்கப்படுகிறது. இதனால் எமது எதிர்கால சந்ததி பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகும் நிலை உள்ளது. யாழ்ப்பாணம் - வடமராட்சி கிழக்கில் பருத்தித்துறையில் இருந்து தாளையடி வரை வாடிகளை அமைத்து தென்னிலங்கையை சேர்ந்த 14 நிறுவனங்கள் கடலட்டை பிடித்துக் கொண்டிருக்கின்றன. இதற்கெதிராக மீனவர்களும் பல்வேறு வகையான போராட்டங்களை நடாத்தியுள்ளார்கள். ஆனால், இதற்கு நிரந்தரமான தீர்வு தான் இன்னமும் எட்டப்படவில்லை.

தாளையடியில் எமது தமிழ் மீனவர்களின் வாடிகள் காய்ந்து போய், உரிய பராமரிப்பின்றியும், தொழில் செய்ய ஆட்கள் இன்றியும் மாறியுள்ளன. இது தொடர்பாக ஒரு தமிழ் மீனவர் தெரிவித்த தகவல்கள் அதிர்ச்சியானவை. கரைவலைத் தொழிலில் பிரதானமாக ஈடுபடும் எமக்கு, கடந்த நான்கு மாதங்களாக மீன்பிடிபாடு மிகவும் குறைந்த நிலையில் உள்ளது. காரணம், கடலட்டை பிடிப்பதற்கு இங்கே வாடிகளை அமைத்துள்ள தென்பகுதி மீனவர்கள் அவர்களது மீன்பிடிப் படகுகளை கடற்கரையின் ஓரங்களால் வேகமாக செலுத்துவதால் எங்களின் பாரம்பரிய கரைவலைகள் அறுக்கப்படுகின்றன. தொடர்ச்சியாக அங்குமிங்கும் கரைகளில் இவர்களது படகுகள் ஓடித்திரிவதால் மீன்கள் கரையை நோக்கி வருவது தடைப்படுவதால் மீன் பிடிபாடு குறைவடைகிறது.

அதே சமயம், தென்னிலங்கை மீனவர்கள் அங்கே பரபரப்பாக இயங்கிக் கொண்டிருக்கிறார்கள். கடலட்டைகளும் சங்குகளும் கூலர் ரக வான்களில் ஏற்றிக் கொண்டு செல்லப்படுகின்றன. இப்படியாக வேறும் பல பெறுமதிமிக்க கடல் வளங்களும் வரைமுறையின்றி பறிபோவது தொடர்ந்தால் ஓரிரு வருடங்களில் எமது கடல்வளம் முழுமையாக சூறையாடப்பட்டுவிடும். ஏற்கனவே தமிழர்களுக்கு எதிராக தொல்லியல் திணைக்களமும், வனவளப் பாதுகாப்பு திணைக்களமும் செயற்பட்டு வரும் நிலையில் தற்போது கொழும்பிலுள்ள நீரியல்வளத் திணைக்களமும் கடலட்டை பிடிப்பதற்கான அனுமதியைக் கொடுத்து தமிழர் விரோதமாக செயற்பட்டு வருகின்றமை அம்பலத்துக்கு வந்துள்ளது.

கடலட்டை பிடிப்புக்கு வடமராட்சி கிழக்கிலுள்ள ஐந்து மீன்பிடி சங்கங்களும், சில தனிநபர்களும் உடன்பட்டுள்ளதாக நீரியல் வளத் திணைக்களம் குறிப்பிடுகிறது. சமாசங்கள், சம்மேளனங்களில் முக்கிய பொறுப்புக்களில் உள்ளவர்கள் பலரும் தென்னிலங்கை முதலாளிகளுக்கு விலைபோன விடயமும் மீனவர்களுடனான உரையாடல் மூலம் தெரிய வந்தது. இந்நிலை மிகவும் ஆபத்தானது. கடந்த பல வருடப் போரினால் கடலுக்குள் முழுமையாக இறங்காது இருந்த எம் மீனவர்கள் அன்று சிங்கள கடற்படையாலும் இன்று தென்னிலங்கை மீனவர்களாலும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளனர். உடனடியாக தமிழர் பிரதேசங்களில் இப்படியான கடல்வளச் சூறையாடல்கள் முழுமையாக நிறுத்தப்படுவது ஒன்றே இதனைத் தீர்க்க உள்ள ஒரே வழியாகும்.

- செ. கிரிசாந் -

**நிமிர்வு இதழ் தொடர்பிலான தங்களின் காத்திரமான விமர்சனங்களையும், ஆலோசனைகளையும் எங்களுக்கு எழுதி அனுப்பலாம். மேலும், வேறெங்கும் பிரசுரமாகாத தங்களின் அரசியல், சமூகம், பொருளாதாரம், பண்பாடு சார்ந்த கட்டுரைகளையும் அனுப்பி வைக்கலாம். தரமானவை பிரசுரிக்கப்படும்.**

- ஆசிரியர்-

# அரசியல் கைதிகள் தொடர்பான கொள்கை நிலைப்பாடு




தொகுப்பு :- விக்கினேஸ்வரி

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் சமகால சட்ட விடயங்களுக்கான அரங்கத்தோடு இணைந்து 'அரசியல் கைதிகளின் விடுதலை: முழுமையான சட்டக் கொள்கை நிலைப்பாட்டை நோக்கி' எனும் கலந்துரையாடல் ஒன்றை நடத்தியது. 01.06.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மண்டபத்தில் இந் நிகழ்வு இடம்பெற்றது.

அதில் பிரதான உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் சட்டத்துறைத் தலைவரும், அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான குமாரவடிவேல் குருபரன் நிகழ்த்தியிருந்தார். அவர் ஆற்றிய உரையின் தொகுப்பு வருமாறு:

நீண்ட காலமாக அரசியல் கைதிகள் விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டு வந்தன. ஆனாலும் ஆனந்தசுதாகரன் என்ற அரசியல்கைதி தன்னுடைய மனைவி இறந்த போது 3 மணித்தியாலங்கள் மாத்திரமே அவருடைய மரண வீட்டிலே பங்கு பற்றி மீள சிறைச்சாலைப் பேரூந்திலே ஏறுகின்ற பொழுது அவருடைய மகளும் அவருடன் சேர்ந்து ஏறுகின்ற காட்சியானது தமிழ் சமூகத்திலே பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியிருந்தது. அதைத் தொடர்ந்து மீள அரசியல் கைதிகள் தொடர்பான பிரச்சனைகள் தொடர்பில் எம் சமூகத்திலே வாதப்பிரதிவாதங்கள் இடம்பெற்றன. கையெழுத்துப் போராட்டங்கள், ஜனாதிபதியிடம் மகஜர் சமர்ப்பிப்பது என்ற வகையிலே போராட்டங்கள் நிகழ்ந்தன. மீள மீள ஏதோ ஒரு சம்பவம் அல்லது ஏதாவதொரு செய்தி என்பது அரசியல் கைதிகள் தொடர்பான விடயங்களில் ஆர்வத்தை எழுப்புவதும் பின்னர் அவை அடங்குவதும் பின்னர் மீள எழும்புவதுமாக தமிழ்ச் சமூகம் இந்த விடயத்தை பார்த்துக் கொண்டிருக்கிறது.

அரசியல் கைதிகள் என்ற பதம் அரசாங்கத்தினாலோ, ஐக்கிய நாடுகள் அமைப்பினாலோ, அல்லது எந்த ஒரு அமைப்பினாலோ பாவிக்கப்படாத வார்த்தையாகும். அடையாளம் கொள்கை ஆய்வு மையமும் சரி, தமிழ் சிவில் சமூக அமையமும் சரி நாம் ஏன் இந்த சொல்லாடலை பாவிக்கின்றோம் என்பதற்கு 2015 தமிழ் சிவில் சமூக அமையத்தினால் வெளியிடப்பட்ட ஒரு அறிக்கையை மேற்கோள் காட்டியிருக்கின்றோம். "அரசியல் காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய காரணத்திற்காக கைது செய்யப்பட்டவர்கள் என்பதனால் அவர்களை நாங்கள் (தமிழ்ச் சமூகம்) அரசியல் கைதிகளாக கருதுகின்றோம். இதன் அடிப்படையில் அவர்கள் சாதாரண குற்றவியல் கைதிகளிலிருந்து வித்தியாச மாகப் பார்க்கப்பட வேண்டியவர்கள்" நாங்கள் எடுத்துக் கொண்ட இந்த வரைவிலக்கணம் சர்வதேச மன்னிப்புச்சபை அரசியல் கைதிகளுக்கு கொடுக்கக் கூடிய வரைவிலக்கணத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.

இதற்கு அப்பால் காத்திரமாக அரசியல்கைதிகள் தொடர்பாக நாங்கள் ஒரு கொள்கை நிலைப்பாட்டை எடுக்க வேண்டுமென்றால் அது எத்தகைய கொள்கை நிலைப்பாடாக இருக்க வேண்டும் என்பதில் நாங்கள் ஒரு தலையீட்டை செய்ய வேண்டும். இதில் நாங்கள் எடுக்கின்ற நிலைப்பாட்டைத் தான் தமிழ் சமூகமும் எடுக்க வேண்டும் என்று நான் சொல்லவில்லை. இது தமிழர் பார்வையில் இருந்து நாம் வைக்கின்ற ஒரு தலையீடு. அந்த தலையீட்டை வைத்துக் கொண்டு அந்த அடிப்படையிலே இதைப்பற்றி சிந்திக்கலாமா என்று ஆராய வேண்டும் என்பது தான் எங்களுடைய வேண்டுகோள்.

இதனை இரண்டு பிரதான விடயங்களாக நாம் நோக்கலாம். ஒன்று, பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தமிழ் அரசியல் கைதிகளுக்கு எதிராக தொடர்ந்து வழக்கு நடத்தப்படுவதன் சரித்தன்மை தொடர்பான பிரச்சனை. இரண்டாவது, தமிழ் அரசியல் கைதிகளுக்கு தமிழ் சமூகம் தொடர்பில் பொதுமன்னிப்பை கோர வேண்டுமா, அல்லது பொது மன்னிப்புக்கு மாற்றாக சட்டத்தின் பாற்பட்டு ஏதேனும் மாற்றீடுகள் உள்ளனவா, மாற்றீடுகளை நாம் தேடவேண்டுமா, அவை எத்தகைய மாற்றீடுகளாக இருக்கமுடியும் என்பது தொடர்பான நிலைப்பாடு.

முதலாவது நிலைப்பாடு பற்றி நான் அதிகம் பேச வேண்டியதில்லை. சுருக்கமாக சொல்லிவிடுகிறேன். இரண்டாவது விடயம் மிக முக்கியமான கடினமான விடயம். ஒரு முழுமையான மாற்றுக்கருத்தை சொல்லுகின்ற விடயமாக இருக்கின்றபடியால் நான் அதில் கூடுதலாக என்னுடைய நேரத்தை செலவழிக்கலாம் எனக் கருதுகின்றேன்.

முதலாவதாக பயங்கரவாத தடைச்சட்டம் பற்றிப் பார்ப்போமானால் 2017 ஆம் ஆண்டு யூலை மாதம் ஐக்கிய நாடுகள் மனிதஉரிமைப் பேரவையினுடைய பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் மனித உரிமைகள் தொடர்பான விடயத்திற்கு பொறுப்பான சிறப்பு அறிக்கையாளர் பென் எமெர்சன் இலங்கைக்கு வந்திருந்தார். வவுனியாவில் அவரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு கிட்டியது. அவர் தன்னுடைய அறிக்கையிலே 82 பேர் இன்னும் குற்றச்சாட்டு பத்திரம் கூட தாக்கல் செய்யப்படாத நிலையில் சிறையில் இருப்பதாக தனக்கு அரசாங்கம் சொன்னதாக கூறினார். அதிலே 70 பேர் ஐந்து வருடங்களிற்கு மேல் எந்த வித வழக்கும்

தாக்கல் செய்யப்படாமல் இருப்பதாகவும், 12 பேர் பத்து வருடத்திற்கு மேல் எந்தவித வழக்கும் தாக்கல் செய்யப் படாமல் இருப்பதாகவும் அவர் தன்னுடைய அறிக்கையிலேயே சுட்டிக்காட்டியிருந்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் 19 ஒக்டோபர் 2017 அன்று கொண்டு வரப்பட்ட ஒத்திவைப்பு பிரேரணையில் பதிலளித்து பேசிய அப்போதைய சட்டம் ஒழுங்கிற்கான அமைச்சர் சாகல ரட்னநாயக்க கைது செய்யப்பட்டவர்களிலே 74 பேர் எந்தெந்த ஆண்டுகள் கைது செய்யப்பட்டனர் என்ற விபரத்தை வழங்கினார். இந்த புள்ளி விபரங்களிலே ஒரு மயக்கத்தன்மை இருக்கின்றது.

சிறைச்சாலைக்கு பொறுப்பான ஆணையாளர் நாயகம் அண்மையிலே ஒட்டுமொத்தமாக சிறைச்சாலையில் 216 பேர் சிறைக்கைதிகளாக இருப்பதாக தெரிவித்தார். அரச ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நெடிய பேட்டியிலே அவர் இதனை கூறினார். அவர்களில் 48 பேர் ஏற்கனவே தண்டனை வழங் கப்பட்டவர்கள். அதாவது வழக்கு நடைபெற்று தண்டனை வழங்கப்பட்டவர்கள் 48 பேர். ஆனந்த சுதாகரன் அந்த வகைப் படுத்தலுக்குள் தான் வருவார். 116 பேருக்கு இன்னும் வழக்கு நடைபெற்று வருவதாகவும், 52 வழக்குகள் நீதவான் நீதி மன்றத்தின் முன் இருப்பதாகவும் குறிப்பிட்டிருக்கின்றார்.

2015 இல் ஆட்சிக்கு வந்த பிறகு இந்த விடயத்தை அரசாங்கம் எப்படி கையாண்டிருக்கிறது என்று பார்ப்போம். ஒன்று நாங்கள் பிணை கொடுக்கின்றோம் என்று அவர்கள் சொல்லுகிறார்கள். அது நீதவான் நீதிமன்றமாக இருக்கலாம் அல்லது மேல் நீதிமன்றமாக இருக்கலாம் தற்பொழுது கூடு தலாக பிணை வழங்குகின்றோம் என்கிறார்கள். பயங்கர வாத தடுப்பு சட்டத்தின் கீழ் பிணை என்பது இல்லை. சட்டமா அதிபர் திணைக்களம் பிணைக்கு அனுமதி வழங்கினால் தான் பிணை கொடுக்கலாம் என்றிருக்கின்றது. ஆகவே 2015 இல் இந்த அரசாங்கம் பதவிக்கு வந்ததன் பின்னர் நாங்கள் அவர்களுக்கு பிணை வழங்குவதனை கூடுதலாக்கியுள் ளோம். பிரச்சனைக்குரிய வழக்குகளாக இல்லாமல் இருந்தால் நாங்கள் பிணைகளை வழங்கியிருக்கின்றோம் என்று சொல்லியிருக்கின்றார்கள்.

இரண்டாவது புனர்வாழ்விற்கு செல்ல விரும்புப வர்களை தாங்கள் புனர்வாழ்விற்கு அனுப்புகின்றோம். அதாவது பாரிய குற்றச்சாட்டுக்கள் இல்லாதவர்களுக்கு புனர்வாழ்வை ஒரு தெரிவாகக் கொடுக்கிறோம். அத்தெரிவை அவர்கள் ஏற்றுக்கொண்டால் அவர்கள் புனர்வாழ்வை பெற்றுச்செல்லலாம் என்ற நிலையை அவர்களுக்கு வழங்கு கின்றோம் என்று அரசாங்கம் பென்எமர்சனுக்கு கூறியதாக அவர் தன்னுடைய அறிக்கையில் சொல்லுகின்றார். தங்களைப் பொறுத்தவரையில் இந்த இரண்டு வடிவங்களில் அரசியல் கைதிகள் பிரச்சனைகளை கையாளுகின்றோம் என தெரி வித்தார்.

அரசியல் கைதிகளை புனர்வாழ்விற்கு அனுப்புவது என்பது பொருத்தமானதா? சரியானதா? சட்டரீதியாக பார்க்கின்ற பொழுது 2009 ஆம் ஆண்டு மக்கள் வெளியேறு கின்ற பொழுது அவர்கள் சரணடையலாம் என்று சொல்லி சரணடையாவிட்டால் என்ன நடக்கும் என்று ஒலி பெருக்கியில் எல்லாம் சொல்லப்பட்டு போராளிகள் மக்கள் என்று பலர் சரணடைந்தார்கள். இது தொடர்பாக 2011 ஆம் ஆண்டு ஓகஸ்ட் இல் அப்போதைய மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தினால் பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழே சில ஒழுங்கு விதிகள் ஆக்கப்பட்டன. 2011 யூலை 31 ஆம் திகதி அவசரகால நிலைமையை நீடிப்பதில்லை என்று தீர்மானித் ததாக சர்வதேசத்திற்கு அறிவித்துவிட்டு, ஓகஸ்ட் 1 ஆம் திகதி பயங்கரவாத தடுப்புச்சட்டத்தின் கீழ் இரண்டு ஒழுங்கு விதிகள் என்று இரண்டு தடிப்பான ஆவணங்கள் வெளியிடப் படுகின்றன. சர்வதேசத்துக்கு தாங்கள் அவசரகால நிலையை நீக்குகின்றோம் என்று சொல்லிவிட்டு பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழே இந்த ஒழுங்குவிதிகள் ஆக்கப்பட்டன.

அந்த ஆவணங்களில் ஒன்றில் யாரை சரணடைந்த வர்கள் என்று கருதலாம், இவ்வாறாக சரணடைந்தவர்களை என்ன செய்யலாம் என்பது கதைக்கப்படுகிறது. பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழோ, அல்லது ஏனைய ஆயுதப் பயன் பாடுகள் தொடர்பிலான ஏனைய சட்டங்களின் கீழோ நான் ஒரு குற்றம் இழைத்தவனாக என்னைக் கருதினால் நானாக என்னை பாதுகாப்புப் படையினரிடம் ஒப்படைப்பு செய்யலாம் என கூறப்படுகிறது. இந்த இடத்தில் இதனையும் சொல்ல வேண்டும். 2012 இல் எங்களுடைய பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரும் செயலாளரும் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்டு அவர்கள் சரணடைந்தவர்களாக கருதப்பட்டு 3 மாதம் புனர்வாழ்விற்கு அனுப்பப்பட்டார்கள். அது நல்ல ஒரு உதாரணம். நாங்கள் அது தொடர்பாக பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் ஊடாக ஐ.நா. செயற்குழுவுக்கு உடனடி மனு ஒன்றை அனுப்பினோம். அதன் பின்னர் ஐக்கிய நாடுகள் சபை யினால் அரசாங்கத்திற்கு அது தொடர்பான கேள்வி எழுப்பப் பட்டது. இதில் சரணடைதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத் தலைவரோ, செயலாளரோ சரணடையவில்லை என்று நாங்கள் சொல்லியிருந்தோம். மாறாக அவர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்பதனை வலியுறுத்தியிருந்தோம். கைது செய்யப்பட்டவர்களையும் சரணடைந்தவர்களாக வகைப்படுத்துவதன் மூலம் அவர்களை புனர்வாழ்வுக்கு அனுப்பலாம். அதாவது இந்த சட்டத்தின் கீழ் தாங்கள் குற்றவாளிகளாக இருக்கக்கூடும் என கருதுபவர்கள் சரணடையலாம் என்றும், அவ்வாறு சரணடைந்தவர்களை ஒன்றிலிருந்து இரண்டு வருடங்கள் புனர்வாழ்விற்கு அனுப் பலாம் என்றும் சொல்லி இந்த விதிகள் பேசுகின்றன.

அப்படியானவர்களுக்குத்தான் புனர்வாழ்வு என்று சொல்லிவிட்டு ஐந்து, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து வருடங் களுக்கு மேற்பட்டு சிறைவாசம் அனுபவித்தவர்களை எந்த அடிப்படையில் புனர்வாழ்விற்கு அனுப்புகின்றார்கள்? சட்டத் தில் அதற்கான இடம் இல்லை என்பதுதான் உண்மை. சட்டத் தில் இடமில்லாத வகையில் அவர்கள் புனர்வாழ்விற்கு அனுப்பப் படுகின்றார்கள். அதன் காரணமாக புனர்வாழ்வு பெற்றதன் பின்னரும் அவர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கொண்டு வருவதற்கான வாய்ப்பு இல்லையா என்ற கேள்வியை அது ஏற்படுத்துகின்றது. அவர்களுக்கு தெளிவாக சொல்லப் படுகின்றது நீங்கள் புனர்வாழ்வு எடுத்துக்கொள்ளுங்கள் என்று.

புனர்வாழ்வு எடுத்தால் அவர்களுக்கு எதிராக வழக்குகள் முன்வைக்க முடியாது.

பல்கலைக்கழகத்தில் மிருதங்க பாடத்தினுடைய விரிவுரையாளராக, போதனாசிரியராக இருந்த திரு.கண்ண தாஸ் அவர்கள் அவ்வாறாக குறிப்பிட்ட கால புனர்வாழ்வு பெற்றவர். அதன் பின்னரும் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு அவர் குற்றவாளியாக ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டதை நாம் காணக்கூடியதாக இருந்தது.

அதன் பின்னராக புனர்வாழ்வைப் பெற்றுக்கொண்டு மீள சமூகத்தில் இணைந்து கொண்டவர்கள் இது நிலைக் குமா என்பது தொடர்பாக தங்களுக்கு ஐயம் ஏற்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளனர். இது பலத்த ஒரு சந்தேகத்தையும் குழப்பத் தையும் ஏற்படுத்துகின்ற விடயமாகவும் இருக்கின்றது என்ப தனையும் சொல்லியிருக்கின்றனர். அதாவது வவுனியா மேல் நீதிமன்றத்தில் 'கண்ணதாஸ் ஏற்கனவே புனர்வாழ்வு பெற்றவர்' என்பது சுட்டிக்காட்டப்பட்டது. புனர்வாழ்வு பெற்றவர் ஏதோவொரு குற்றத்தின் கீழ் புனர்வாழ்வையும் ஒரு தண்டனையாகப் பெற்றிருக்கிறார்.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய மனிதஉரிமை காரியாலயம் இலங்கை தொடர்பாக வெளியிட்ட அறிக்கை ஒன்றில் புனர்வாழ்வு என்ற பெயரில் நடந்த சித்திரவதைகள் பற்றி பக்கம் பக்கமாக பேசப்பட்டுள்ளது. புனர்வாழ்வு என்ற பெயரில் என்ன உண்மையாக நடக்கிறது என்பது பற்றி ஒரு பக்கம் பேசலாம். ஆனால் புனர்வாழ்விற்கு அனுப்புவதே அவர்களுக்கு முற்றான விடுதலை என்ற உத்தரவாதத்தை வழங்குகின்றதா என்றால் அதுவுமில்லை என்பது கண்ணதாஸ் அவர்களின் வழக்கு மூலமாக சொல்லப்படுகின்ற செய்தி யாகும். இது விடுவிக்கப்பட்டு வெளியில் வந்திருக்கக்கூடிய அரசியல் கைதிகளின் தொடர்ச்சியான எதிர்காலம் தொடர் பிலும் ஒரு கேள்விக்குறியை ஏற்படுத்தியிருக்கும் ஒரு முக்கிய மான விடயம். இது தொடர்பான ஒரு தெளிவு வரவேண்டும். புனர்வாழ்வை ஒரு தண்டனையாக கருதுவோமானால் சட்டப் படி ஒரு தண்டனைக்கு மாற்றீடாக புனர்வாழ்வு இருக்குமாக இருந்தால் எங்களுடைய குற்றவியல் தண்டனை வழக்கிலே ஒரே நபரை இரண்டு தடவை தண்டனைக்கு உட்படுத்தமுடியாது. அவர் புனர்வாழ்வு பெற்றது ஒரு தண்டனை, இப்பொழுது ஆயுள்தண்டனை பெற்றிருப்பது இரண்டாவது தண்டனை. இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டது. அப்படியிருந்தாலும் வவுனியா மேல் நீதிமன்றம் இந்த விடயத்தை கவனிக்கத் தவறியிருந்தது. கவனிக்க மறுத்திருந்தது. தற்பொழுது இவ்வழக்கு மேல் முறையீட்டு நீதிமன்றத்திற்கு போயிருக்கின்றது. இதுவும் ஒரு பெரிய சிக்கல். பயங்கரவாத தடைச்சட்ட வழக்காக இருக்கலாம், அல்லது குற்றவியல் வழக்காக இருக்கலாம் உயர்நீதிமன்றத்தில் தீர்ப்பு வந்த பிறகு அப்பீலுக்கு சென்றால் அந்தக் கேஸ் எடுபடுவதற்கே இரண்டு வருடங்கள் எடுக்கும். அவ்வளவிற்கு மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் குறிப்பாக குற்றவியல் மேன்முறையீட்டு வழக்கில் ஒரு தேங்கிய நிலை காணப்படுகின்றது.

இதைத் தவிர எங்கே வைத்து புனர்வாழ்வு எடுக்கப் போகிறீர்களா இல்லையா என்ற கேள்வி கேட்கிறார் கள் என்பதனையும் பாருங்கள். நீதவான் நீதிமன்றத்தில் வைத்துக் கேட்கிறார்கள். நீதவான் நீதிமன்றத்தில் PTA வழக்கு தாக்கல் செய்யப்படுவதில்லை. குற்றச்சாட்டுப் பத்திரமே வாசிக்கப்படுவதில்லை. குற்றச்சாட்டுப்பத்திரம் வாசிக்கப்படு வது, நீங்கள் குற்றவாளியா, சுற்றவாளியா என்று கேட்டு வழக்கு விசாரணை முழுமையாக நடைபெறுவது எல்லாம் மேல் நீதிமன்றத்தில் தான். ஆனால் நீதவான் நீதிமன்றத்தில் புனர்வாழ்வு சந்தர்ப்பம் கொடுக்கப்படுபவருக்கு எதிராக இன்னமும் குற்றச்சாட்டுப் பத்திரமே வாசிக்கப்படவில்லை என்பதை புரிந்து கொள்ளவேண்டும். குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டு நான் குற்றவாளி என்று ஒப்புக் கொண்டு அதன் பின்னர் அவர் புனர்வாழ்விற்கு அழைக்கப்படுவார் என்றால், ஓம் குற்றச்சாட்டுப் பத்திரம் வாசித்தாச்சு, குற்றவாளி என்ற அடையாளம் காணப்பட்டாச்சு, புனர்வாழ்வு கொடுத்தாச்சு. ஆகவே திரும்ப குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்க முடியாது என்று வரும். ஆனால் நீதவான் நீதிமன்றத்தில் வைத்து இது நடப்பதனால் இந்த புனர்வாழ்வு முறை உண்மையில் இந்த விடயத்தில் ஒரு தெளிவான பதிலை நிச்சயமாக வழங்காது.

சர்வதேச மட்டத்தில் தொடர்ந்து இந்த அரசாங்கம் எடுத்துவரக்கூடிய ஒரு பிரச்சாரம் தாங்கள் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து கைதுகளை செய்யவில்லை என்பது. 2015, 2016 ஆம் ஆண்டுகளில் தான் இறுதியாக கைது செய்ததாக சொல்லுகிறார்கள். ஆனால் எங்களுக்குத் தெரியும் பயங்கரவாத தடைச்சட்டத்தின் பின்னர் அதற்குப்பிறகும் கைதுகள் நடைபெற்றிருக்கின்றன. அப்படியான கைதிகளை நீண்டகாலமாக தொடர்ந்து வைத்திருப்பதில்லை என்றாலும், அதை இன்னும் பாவித்து ஒரு விதத்தில் சமூகத்தை அச்சுறுத் தும் பணி நடைபெற்றுக்கொண்டு தான் இருக்கின்றது. பயங் கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்வார்கள் கொஞ்சக் காலம் வைத்திருப்பார்கள் பிறகு விடுதலை செய்துவிட்டு பிறகு திருப்பி வழமையான சட்டத்தின் கீழ் கைது செய்கின்ற நட வடிக்கைகள் தொடர்ச்சியாக நடந்து கொண்டிருக்கின்றன. ஆனால், புதிதாக தாங்கள் கைது செய்வதில்லை என்று சட்டமா அதிபர் திணைக்களம் சொல்லுகின்றது. ஆனால் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டத்தை அவர்கள் உப யோகித்து வருகின்றார்கள் என்பதற்கு சான்று இருக்கின்றது.

எங்களுடைய வணக்கத்திற்குரிய எழில்ராஜனுடைய முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் வழக்கு மீளாய்வுக்காக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் வந்த பொழுது தற்செயலாக நான் இன்னொரு வழக்கை கேட்க வேண்டி வந்தது. எழில் ராஜனுடைய வழக்கிற்கு அடுத்ததாக வந்த வழக்கு ஏறத்தாழ 15 வருடங்களிற்கு முன்னர் விடுதலைப்புலிகள் இயக்கத்துடன் வர்த்தகத் தொடர்பு வைத்திருந்தார் என்பதற்காக ஒருவருக்கு எதிராக குற்றச்சாட்டுப் பத்திரம் வாசிக்கப்பட்டது. அப்படியான வழக்குகள்கூட இன்றும் தொடர்ந்து வருகின்றன என்பதுதான் நிஜம். நான் அந்த வழக்கை கேட்டுவிட்டு அன்று மாலை தான் பென் எமர்சனை சந்தித்தேன். பயங்கரவாத தடைச்சட்டத்தை தாங்கள் உபயோகிப்பதில்லை என்று அரசாங்கம் சொல்லு கின்றது. அது உண்மையா என்று கேட்டார். இன்று காலை மேல் நீதிமன்றத்திற்கு நேரில் வந்திருந்தால் நாங்கள் காட்டியிருப்போம் எனக் கூறினேன்.

தொடர்ச்சியாக பயங்கரவாத தடைச்சட்டத்தில் கைது செய்யாமல் இருக்கலாம். ஆனால் 2010 இற்கு பத்து வருடங்கள் முதல் கிட்டத்தட்ட 2000 ஆம் ஆண்டு சமாதான காலப்பகுதியில் வன்னியில் வர்த்தகம் செய்த எல்லோரும் பிடிக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்கிறதா என்ற கேள்வி எழுப்பக் கூடிய அளவிற்கு இது உள்ளது. நேரடியாக போரியலோடு சம்பந்தமில்லாத வழக்குகள் கூட PTA வழக்கு கள் என்று வருவது தான் இன்றைய யதார்த்தமாக இருக் கின்றது. **எந்த விதத்திலும் பயங்கரவாத தடைச்சட்டத் தின் கீழ் வழக்குத் தொடர்வதை அரசாங்கம் நிறுத்திக் கொள்ள வேண்டும் என்பதே நாங்கள் எடுத்திருக்கக் கூடிய நிலைப்பாடு. தொடரப்பட்ட வழக்குகள் கூட பயங்கர வாத தடைச்சட்டத்தின் கீழ் தொடர்ந்து விளக்கத்திற்கு கொண்டு செல்வது பிழை என்ற நிலைப்பாட்டை நாம் எடுக்கிறோம். அதற்கான காரணம் பல்வேறு நபர்கள் பல இடங்களில் சொன்னதுதான். பயங்கரவாதச் சட்டம் ஒரு நீதியான விசாரணைக்கு இடம் கொடுக்காது. குற்ற ஒப்புதல் வாக்குமூலங்களை வைத்துக்கொண்டு தான் கூடுதலாக இந்த வழக்குகள் முடிவுறுத்தப்படுகின்றன.**

ஐக்கிய நாடுகள் சபையினுடைய மனித உரிமைக் குழுவினுடைய ICCPR அறிக்கைகளில் பயங்கரவாத தடைச் சட்டம் என்பது நீதியான நியாயமான விசாரணைகளுக்கு இடமளிக்காது என்பது பல முறை கூறப்பட்டுள்ளது. பல பத்து வருடங்களாக அதாவது பயங்கரவாத தடைச்சட்டம் வந்த நாளிலிருந்து கிட்டத்தட்ட 30 வருடங்களாக இலங்கையின் தெற்கிலிருந்து மனித உரிமை அமைப்புக்கள் உட்பட பல்வேறு அமைப்புக்கள் மிகத் தெளிவாக எடுத்துக் கொண்டிருக்கக் கூடிய நிலைப்பாடு இது. பயங்கரவாத தடைச்சட்டத்தை நாங்கள் பாவிக்கமாட்டோம் இன்னும் உயிர்ப்போடு வைத் திருக்கவில்லை என்று சொல்லுகின்ற அரசாங்கம் பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வழக்கு தொடர்வது அதாவது பழைய பயில்களுக்கு புதிய வழக்குகள் தொடர்வதும் பிழையானது.

ஐக்கிய நாடுகள் சபையினுடைய மனித உரிமைகள் பேரவை எடுத்த தீர்மானம் முப்பது ஒன்றில் அவர்கள் வாக்குறுதி அளித்தபடி அந்த பயங்கரவாத தடைச்சட்டம் இல்லாது ஒழிக்கப்பட வேண்டும். சாதாரண குற்றவியல் சட்டத் தின் கீழ் தேவைப்பட்டால் அவர்கள் இந்தப் பிரச்சனைகளை கையாண்டு கொள்ளலாம் என்ற ஒரு விடயத்தை சொல்லு கின்றோம். தெற்கில் பயங்கரவாத தடைச்சட்டத்தை (prevention of terrorism act of sri lanka) ஐ இல்லாமல் செய்து counter terrorism act of sri lanka என்ற ஒன்றை கொண்டு வரலாம் என்று சொல்லுகிறார்கள். எங்களைப் பொறுத்தவரைக்கும் பயங்கரவாதத்தை நீங்கள் அழித்ததாக சொன்னால் பிறகு எதற்கு கவுண்டர் பண்ணுறதோ, பிரி வென்ஷன் பண்ணுறதோ எங்கிருந்து எழுகின்றது என்ற கேள்வியைக் கேட்கின்றோம்.

சாதாரண சட்டத்தின் கீழ் இந்த விடயங்கள் கையாள முடியாது என்பதற்கு என்ன அத்தாட்சியை இந்த அரசாங்கம் முன்வைக்கப் போகின்றது என்ற கேள்வியைக் கேட்கப் போகின்றோம். புதிதாக ஞானசாரதேரர் போன்றவர்களை கைது செய்வதற்கு பயங்கரவாத தடைச் சட்டம் தேவை என்று இந்த அரசாங்கம் காரணம் சொல்லுகின்றது. என்னைப் பொறுத்தவரைக்கும் நாம் ஒரு தத்துவசார் நிலைப்பாட்டை எடுக்க வேண்டும். ஞானசாரதேரர் போன்றவர்களைக் கூட பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யக் கூடாது என்ற நிலை எடுக்க வேண்டுமென நான் நம்புகின்றேன். அவர்களை கைது செய்வதற்காக ஐசிசிபிஆர் இற்கு கீழ் வெறுப்பை தூண்டுகின்ற பேச்சைப் பேசுபவர்களுக்கு எதிராக எடுக்கக்கூடிய சட்டம் இருக்கின்றது. சாதாரண கிரிமினல் சட்டங்கள் இருக்கின்றன. அதில் வைத்து அவர்களைப் பார்த்துக் கொள்ளலாம். அதற்காக எங்களுக்கு பயங்கரவாத தடைச் சட்டம் தேவை என்று சொல்லுவது உண்மையில் மக்களை பிழையாக நடத்துவது. ஆகவே அதை நீக்க வேண்டும்.

இதில் இன்னொரு அம்சத்தை பார்க்க வேண்டும். பயங்கரவாத தடைச்சட்டத்திற்கு கீழே என்ன மாதிரியான வழக்குகள் போடப்படுகின்றன? சாதாரணமாக விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களாக அல்லாதவர்களாக இருந்தவர்கள், அவர்களோடு வெளியிலிருந்து செயற்பட்டவர்கள் அல்லது வர்த்தக உறவு வைத்திருந்தவர்கள், சமைத்துக் கொடுத்தவர்கள் போன்றவர்களுக்கு எதிராகவும் வழக்குத் தாக்கல் செய்யப்படு கின்றது. அல்லது இரண்டாவது வகை இயக்க உறுப்பினர் களாக இருந்து இந்த முகாம் அடித்தவை, அந்த முகாமுக்கு எதிரான சமரில் பங்குபற்றியவர்கள் அதற்கான ஆதாரம் இருக்கிறது என்று சொல்லப்படுகிறது. உதாரணமாக யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் முல்லைத்தீவு முகாம் அடித்தது தொடர்பான வழக்கொன்று பலவருடங்களாக நடந்து கொண்டிருந்தது. முடிந்துவிட்டதோ தெரியவில்லை.

மூன்றாவது விடயம் இதுதான் பிரச்சனையான விடயம். இதுதான் நாங்கள் ஆழ்ந்து சிந்திக்க வேண்டிய விடயம். விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்த நபர்களால் யுத்தக்குற்றங்கள் மேற்கொள்ளப்பட்டது என்று கூறப்பட வில்லை. யுத்தத்தின் போது இழைக்கப்பட்ட குற்றங்கள் என்றே சொல்லப்படுகிறது. சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் குற்றங்களாக இருக்கக்கூடிய குற்றங்களுக்கு PTA க்கு கீழே வழக்கு தொடர்கின்றார்கள். உதாரணம் ஆனந்தசுதாகரன் விடயம். இதில் பிரச்சனை என்னவென்றால் ஆனந்த சுதாகரன் உண்மையாக அதில் ஈடுபட்டாரா, இல்லையா என்பது வேறு விடயம்.

இதில் நாங்கள் என்ன நிலைப்பாட்டை எடுக்க வேண்டும்? மூன்று விதமான பதில்களை இங்கு சொல்லலாம். ஒன்று யுத்தத்தின் போது நேரடி பங்குபற்றுனர்களாக அல்லாமல் மறைமுகமாவோ அல்லது விடுதலைப்புலிகளுடன் தொடர்பு வைத்திருந்தார்கள் என்ற அடிப்படையிலோ நீங்கள் வழக்குத் தாக்குதல் செய்வதாக இருந்தால் அதனை நாங்கள் அரசியல் அறம் சார்ந்து பிழை என்கின்றோம். அப்படிப் பார்த் தால் நீங்கள் ஏறத்தாழ ஒவ்வொரு தமிழ் குடிமகனையும் கொண்டுபோய் நீதிமன்றத்தின் முன்னால் நிற்பாட்ட வேண்டி வரும். ஏதோவொரு கட்டத்தில் சாப்பாடு கொடுத்திருப்போம். ஏதோவொரு வகையில் நீங்கள் இல்லாவிட்டாலும் உங்களுடைய மாமனாரோ, மச்சினனோ எவரோ ஒருவர் செய்திருக்கப் போகிறார். ஆகவே ஒவ்வொரு தமிழ் குடும்பத்தையும் பாதிக்கக்கூடிய அணுகுமுறை அது. உண்மை

# "அரசியல் காரணங்களுக்காக ஆயுதம் ஏந்திப் போராடிய காரணத்திற்காக கைது செய்யப்பட்ட வர்கள் என்பதனால் அவர்களை நாங்கள் (தமிழ்ச் சமூகம்) அரசியல் கைதிகளாக கருதுகின்றோம்"

யிலேயே நாங்கள் யுத்தத்திற்கு வெளியிலே வந்து சமாதான மாகப் போக வேண்டுமென்றால் அந்த அணுகுமுறையை அரசு பின்பற்றாது.

இரண்டாவது யுத்தத்தில் பங்குபற்றிய விடுதலைப் புலிகள் இயக்க உறுப்பினர்கள் அரசுக்கு எதிராக ஆயுதம் தூக்கிய குற்றச்சாட்டு. இதற்காகவும் PTA இல் வழக்குகள் பாய்கின்றன. இந்த விடயத்தில் சர்வதேச சட்டத்தையும், உள்ளூர் சட்டத்தையும் பார்ப்போம். அரசுக்கெதிராக ஆயுதம் தூக்குவதற்கு சர்வதேச சட்டத்தில் என்ன சொல்லப்படு கின்றது. உள்ளூர் சட்டத்தில் என்ன சொல்லப்படுகின்றது எனப் பார்த்தல் இலகுவானது. எந்த அரசாக இருந்தாலும் தனக்கு எதிராக ஆயுதம் தூக்குவதை சரி என்று சொல்லாது. அரசு வன்முறை தொடர்பில் தனி உடமையைக் கோருகின்றது. யாராவது தன்னுடைய எல்லைப்பரப்புக்குள் வன்முறையை பாவிப்பதை மறுத்து வன்முறை மீது தனக்கு மட்டுமே தனி உடமை வேண்டும் என்று கேட்பதுதான் அரசினுடைய வரை விலக்கணம் என சர்வதேச அறிஞர் ஒருவர் கூறியிருக் கிறார். அப்படிப் பார்த்தால் தனக்கு எதிராக வேறு யாரும் ஆயுதம் தூக்குவதை அரசு அனுமதிக்காது. சமூக ஒப்பந்தக் கோட்பாடுகள் அடிப்படையில் அரசினுடைய உருவாக்கத்தை எடுத்துப் பார்த்தால் அதன் நியாயமும் அதைப்பற்றித்தான் சொல்லப்படுகின்றது. அதாவது ஒவ்வாருவருக்கும் தன்னை தற்பாதுகாப்புச் செய்வதற்கான உரிமையை விட்டுக் கொடுத்து அதற்குப் பதிலாக அரசு எங்களுடைய உரிமைகளைப் பாதுகாத்துத் தரும் என்பதற்காகத் தான் நாங்கள் அந்த உரிமையை விட்டுக்கொடுத்தோம். அந்த அடிப்படை யில் பார்த்தால் ஏறத்தாழ எல்லா தேசிய அரசுகளும் ஒரே மாதிரியானவை தான். இன்று பரவலாக பேசப்படுகின்ற அமெரிக்க யாப்பின் இரண்டாவது திருத்தம் எதற்கு வகை செய்கின்றது என்றால் நீங்கள் தனிநபராகவும் ஆயுதம் வைத்திருக்கலாம் என்கிறது. அமெரிக்க அரசிய லமைப்பு உருவான காலம், அமெரிக்காவின் வடக்கு, தெற்கு இடையே போர் நடந்த போது லிபரலா இருக்கின்ற வடக்கு மாநிலத்தவர்களை நம்ப முடியாது என்று கறுப்பின அடிமைத்தனத்தின் பக்கம் நின்ற தெற்கு மாநிலத்த வர்கள் சொன்னார்கள். அவர்களிடம் முற்றுமுழுதாக இராணு வத்தைக் கொடுத்துவிட முடியாது. நாங்களும் சொந்தப் பாது காப்புக்காக ஆயுதத்தை வைத்திருக்க வேண்டும் என்று சொன்னார்கள்.

சர்வதேச சட்டம் இரண்டு அரசுகள் அல்லது பல்வேறு அரசுகளுக்கிடையில் மோதல் நடைபெறுகின்ற பொழுது உதாரணமாக இந்தியாவும் பாகிஸ்தானும் சண்டை பிடிக்கிறது என்றால் இந்திய ஆமியும், பாகிஸ்தான் ஆமியும் போரில் ஈடுபடுகிறார்கள் என்றால் பாகிஸ்தான் ஆமியைக் இந்தியா தன்னுடைய நீதிமன்றில் கொண்டு போய் நிறுத்த முடியாது. ஏனென்றால் தனக்கு எதிராக யுத்தம் தொடங்கிய குற்றத்திற்காக எந்த அரசினுடைய அரச படைக்கும் அந்த அரசுக்கான போரிடுதலுக்கான உரிமை சர்வதேச சட்டத்தில் தெளிவாக பாதுகாக்கப்பட்டுள்ளது. அரச படைகளில் போரில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் சட்டப் பாதுகாப்பு அது. அதாவது வெறுமனே ஆயுதம் எடுத்துப் போராடினான் என்பதற் காக பாகிஸ்தான் வீரனுக்கு எதிராக எந்த ஒரு இந்திய நீதி மன்றத்தில் கூட வழக்குத் தாக்கல் செய்ய முடியாது.

சர்வதேச சட்டத்தில் நாடுகளுக்கிடையிலான போரில் பங்குபற்றுகின்ற அரச படை உறுப்பினர்களுக்கு எதிராக ஆயுதம் ஏந்தியவர்கள் என்று வழக்கு வைக்க முடியாது. ஆனால் உள்ளக ரீதியாக நாட்டிற்கு உள்ளுக்குள் நடக்கின்ற யுத்தங் களிற்குள் அதற்கு சாத்தியம் இருக்கிறதா என்றால் இல்லை என்பதே அர்த்தம். இதற்கு காரணம் ஒரு நாளும் அரசுகள் அதற்கு அனுமதிக்கமாட்டாது. இறைமையை அடிப்படையாகக் கொண்டு உருவாக்கப்பட்ட சர்வதேச சட்டத்தில் தங்களுடைய இறைமைக்கு சவால் கொடுக்கக்கூடிய ஆயுதக் குழுக்களுக்கு ஆயுதக் குழுக்களில் பங்கு எடுப்பவர்களுக்கு அந்த உரிமையை அரசு வழங்குமா என்று கேட்டால் இல்லை என்பதே பதில். ஆனால் வெவ்வேறு அரசுகள் வெவ்வேறு காலப்பகுதி களில் உள்ளக ரீதியில் போரில் ஈடுபட்டவர்களுக்கு வழக்கி லிருந்து விலக்களிப்பு செய்த வரலாறு உள்ளது. உள்நாட்டுப் போரில் வெறுமனே அரசுக்கெதிராக ஆயுதம் தாங்கி போராடியமை என்கிற ஒரேயொரு காரணத்துக்காக அவருக்கெதிராக வழக்கு வைக்கலாம் என்று சட்டம் சொல்ல வில்லை.

இலங்கை அரசாங்கம் தமிழ் மக்களோடு நல்லிணக்கத்திற்கு வந்து உண்மையாக நாங்கள் சந்தோசமாக இந்த நாட்டில் இருக்க வேண்டும் என்று நினைத்தீர்கள் என்றால் வெறுமனே ஆயுதம் தாங்கி உங்களுக்கெதிராக போராடியது என்பதற்காக தயவு செய்து வழக்கு வைக்காதீர்கள்.

மூன்றாவது விடயம் சிக்கலான விடயமாகும். சர்வதேச சட்டத்தால் சர்வதேச போரில் பங்கு பற்றியவர்களுக்கு வழங்கப் படுகின்ற விலக்களிப்பு பல்வேறு அரசுகளால் உள்ளூர்ப் போரில் பங்கு பற்றியவர்களுக்கும் வழங்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான விலக்களிப்பை ஏன் எங்களுடைய விடுதலைப் புலிகளில் பங்கு பற்றிய தமிழ் உறவுகளுக்கு வழங்கக்கூடாது என்கிறீர்கள்? இதற்கு பதிலாக என்னத்தை கேட்கலாம் என்கின்ற போது பொதுமன்னிப்பு என்ற வார்த்தை பாவிக்கப் படுகின்றது.

சட்டத்தரணிகளின் வேலை சட்ட வகைகளை கொண்டு போய் மக்களிடம் திணிப்பதல்ல. பொதுவாக தமிழ் சமூகத்தின் மத்தியில் இருக்கின்ற உரையாடலையும் சட்டத்தையும் அடிப் படையாக கொண்டு அந்த உரையாடலையும் சட்டத்தையும் தொடர்புபடுத்தி அது தொடர்பான வெளிப்படுத்தலை செய் வதற்குத் தான் நாங்கள் முயற்சிக்கின்றோம். அந்த வகையில் அவர்கள் எங்கள் சார்பில் போரிட்டவர்கள். ஆயுதம் தூக்கிய

ஒரே காரணத்திற்காக அவர்களுக்கெதிராக நீங்கள் வழக்கு வைக்கக்கூடாது. சர்வதேசப் போரில் இது பாவிக்கப்பட்டதற் கான சான்று இருக்கிறது. உள்ளூர் போரிலும் இதை பாவியுங்கள் என்று கேட்கலாம்.

பொதுமன்னிப்பு கேட்பதில் இரண்டுவிதமான சிக்கல்கள் இருக்கின்றது. ஒன்று சர்வதேச சட்டம் சார்ந்தது. இரண்டாவது அரசியல் அறம் சார்ந்தது. சர்வதேச சட்டம் சார்ந்த விடயத்தில் பல்வேறு அறிக்கைகளில் சுட்டிக் காட்டி யிருக்கின்றோம். சர்வதேச சட்டம் வளர்ந்து வரும் விதம் என்னவென்றால் பொதுவாக யுத்தத்தில் ஈடுபட்ட தரப்பில் போர்க்குற்ற மீறல்கள் நடைபெற்றிருந்தால் அதற்கு மன்னிப்பை கொடுக்கும் அணுகுமுறை பிழையானது என்ற அணுகுமுறை சர்வதேச சட்டத்தில் வளர்ந்து வருகின்றது. பொது மன்னிப்பு வழங்கினால் உதாரணமாக சிறிலங்கா இராணுவத்திற்கு பொதுமன்னிப்பு வழங்க வேண்டும் என்று சொல்லுகிறார்கள். ஆனால் அரசாங்கம் இராணுவம் குற்றமே செய்யவில்லை என்று தான் சொல்லும். அப்படிச் சொல்லுவது இன்று சர்வதேச சட்டத்தில் பிழையாகத் தான் பார்க்கப்படுகின்றது.

இராணுவம் புரிந்த குற்றங்களுக்கு பொறுப்புக்கூறலை தமிழ் மக்கள் கேட்பதன் நோக்கம் இனி வரும் காலங்களில் இப்படியொரு துயரம் எம் இனத்துக்கு நடக்கக்கூடாது என்பதற் காக தான். பொதுமன்னிப்பு என்பது சர்வதேச சட்டத்திலேயும் இல்லை. தமிழ் மக்கள் இதுவரை பொறுப்புக் கூறல் தொடர்பாக எடுத்து வந்த நிலைப்பாட்டிலும் இல்லை. எங்களுடைய தமிழ் அரசியல் கைதிகள் மீது சுமத்தப்படுகின்ற யுத்தக் குற்ற மீறல் தொடர்பாக என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகிறோம் என்ற ஒரு கேள்வி எழுகிறது. படையினருக்கு மட்டும் தான் பொது மன்னிப்பு வழங்கக் கூடாதா? விடுதலைப்புலிகளுக் கும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருந்த உறுப்பினர்களுக் கும் பொது மன்னிப்புக் கொடுக்கக்கூடாதா என்ற ஒரு சிக்கலான கேள்விக்கு வருகின்றோம். இந்தக் கேள்வி யிலிருந்து தப்பிக்கவே வழியில்லை.

முதலாவது நாம் எடுக்க வேண்டியதும் எடுக்கத் தக்கதுமான நிலைப்பாடு யார் யுத்தக்குற்ற மீறல் செய்திருந் தாலும் நிச்சயமாக விசாரிக்கப்பட வேண்டும் என்பதே. தந்திரோபாய ரீதியாக மட்டுமல்ல ஆத்மார்த்த ரீதியாக பொறுப்புக்கூறலை விரும்புபவர்கள் கட்டாயம் இதனைக் கேட்பார்கள். இரண்டாவது அந்த பொறுப்புக் கூறலை செய் வதாக இருந்தால் எவ்வாறு அதனை செய்ய வேண்டும். இதில் சர்வதேச சட்டத்தில் பல்வேறு அம்சங்கள் இருக்கின்றன. யார் துவக்கை வைத்துக் கொண்டிருக்கிறானோ சர்வதேச மனிதாபி மான சட்டத்தில் அவனை பிழை சொல்லாதீர்கள். யார் அவனுக்கு உத்தரவிட்டானோ அவன் தான் கூடப் பொறுப் புள்ளவன். அவனை கொண்டுவந்து சர்வதேச மனிதாபி மான சட்டத்தில் நிறுத்துவதுதான் செய்ய வேண்டியது. வழமை யாக குற்றவியல் சட்டத்தில் இப்படி நாம் பார்ப்பதில்லை. யார் கொலை செய்தானோ அவனுக்கும் தண்டனை கொடுப்போம். யார் அவனுக்கு ஆணையிட்டானோ அவனுக்கும் தண்டனை வழங்குவோம். சர்வதேச மனிதாபிமான சட்டத்தில் அப்படி யில்லை. இங்கு இந்த தவறு மீள இடம்பெறக்கூடாது என்ப தற்காக அதற்கு யார் காரணமாக இருந்தார்களோ, யார் உத்தரவிட்டார்களோ அவர்களைத்தான் கொண்டுவர வேண்டும் என்பது மிகத் தெளிவான ஒரு நிலைப்பாடு.

ஆகவே இன்று யார் விடுதலைப்புலிகள் உறுப் பினர்களாக யுத்த மீறல்கள் குற்றச்சாட்டுக்கு உள்ளாகிறார் களோ அவர்கள் எல்லோரும் களத்தில் நின்ற போராளிகள். ஆகவே அவர்களுக்கு எதிராக சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் கீழ் வழக்குகள் கொண்டு வர முடியாது. அவர்கள் துவக்குகளை இயக்கியவர்களே தவிர உத்தரவிட்டோர் அல்ல. இரண்டாவது விடயமாக சொல்லுகிறோம் இந்த குற்றச் சாட்டுக்களை PTA ற்கு கீழ் செய்ய முடியாது என்று. PTA க்கு கீழ் எங்களுடைய பிள்ளைகளைத்தான் கொண்டு வந்து விட்டிருக்கிறீர்களே தவிர ஆமியைக் கொண்டு வந்து நிறுத்தியதில்லை. PTA யை நீங்கள் பாகுபாடு காட்டி அதனை பயன்படுத்துகிறீர்கள். சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களை விசாரிப்பதற்கான வாகனமோ, சட்டமோ நிச்சயமாக பயங் கரவாத தடைச்சட்டம் இல்லை. அதற்குத்தான் கேட்கிறோம் சர்வதேச தீர்ப்பாயத்தைக் கொண்டு வாருங்கள் என்று. குறைந்த பட்சம் கலப்பு தீர்ப்பாயத்தையாவது கொண்டு வாருங்கள். அங்கு சர்வதேச மனிதாபிமான தடைச்சட்டத்தின் கீழ் யுத்த மீறல்கள் செய்த எல்லோரையும் விசாரிக்கலாம்.

ஆகவே இந்த அறிக்கை எடுத்திருக்கும் நிலைப்பாடு, பொதுமன்னிப்பு என்று தமிழ் சமூகம் கேட்கவில்லை என்பதே. எங்களுடைய ஆயுதப் போராட்டத்தில் நாங்கள் பிழை விட்டிருந்தோமென்றால் அதற்கு பொறுப்புக் கூற எங்களு டைய மக்களும் எங்களுடைய போராளிகளும் தயார் நிலையில் இருக்கிறார்கள். அதனையும் சரியாக சட்டத்திற்கு கீழ் செய்ய வேண்டும். அதிலேயும் சாதாரண படைச் சிப்பாய்களை, படை வீரர்களை உட்படுத்த முடியாது. அதற்கு ஆணையிடும் அதிகாரம் உள்ளவர்களைத் தான் கொண்டு வரவேண்டும். நிச்சயமாக அதனை PTA க்குள் செய்ய முடியாது. நியாயமாக அந்த விசாரணை நடக்க வேண்டுமென்றால் அது சர்வதேச சட்டத்திற்கு கீழ், சர்வதேச தீர்ப்பாயத்திற்கு கீழ் நடக்கின்ற ஒரு விசாரணையாகத் தான் இருக்க முடியும் என்கிறோம்.

அரசியல் கைதிகள் விடயத்தில் இவ்வளவு பல்வகைமை இருக்கின்றதை தான் நாங்கள் சொல்ல வருகின்றோம். இதனை எப்படி நாம் அரசிடம் கேட்பது? விடுதலைப்புலிகள் உறுப்பினர்கள் அல்லாமல் அவர்களோடு தொடர்புடைய வர்களை பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் வைத்திருந்தால் நிச்சயமாக அதை நீங்கள் செய்யக்கூடாது என்று கேட்கிறோம். விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்து முகாம்களை தாக்கினார்கள் என்பதனால் அவர்களுக்கு எதிராக PTA ஐ பயன்படுத்தாதீர்கள் என்று சொல்லுகிறோம். மூன்றாவது விடயம் விடுதலைப்புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என்று சொல்லி யுத்தமீறல்கள் செய்தவர்கள் என்று சொல்லப்பட்டிருந் தால் அதற்கு PTA அல்ல வாகனம். உள்ளூர் நீதிமன்றங்க ளையும் பயன்படுத்த முடியாது. அதற்குரிய முறையில் அந்த விசாரணைகளைச் செய்யுங்கள் என்ற நிலைப்பாட்டை நாம் எடுத்திருக்கின்றோம். இந்த விடயத்தை விசாலமாக அதனு டைய ஆழ அகலத்தோட பார்த்து தமிழ் மக்களும், அவர் களுடைய பிரதிநிதிகளும் அவர்களுடைய சிவில் சமூகத்தைச் சேர்ந்தவர்களும் நிலைப்பாடு எடுக்க வேண்டும்.




# நுண்கடன் பயனுள்ளதே! ஆனால்...

-ரஜீவன்-

செப்டெம்பர் 11, 2001 அமெரிக்க உலக வர்த்தக மையத் தாக்குதலின் பின்னர் அமெரிக்கப் பொருளாதாரம் நலிந்து போகாமலிருக்க அமெரிக்க அரசு பல்வேறு பொருளாதார நடவடிக்கைகளை உள்நாட்டில் முன்னெடுத்தது. மத்திய திறைசேரி வட்டி விகிதத்தை குறைத்து வங்கிகளில் பணப்புழக்கத்தை அதிகரித்தது. இதன் அங்கமாக பொதுமக்கள் குறைந்த வட்டி வீதத்தில் பல்வேறு தேவைகளுக்காக வங்கிகளிடமிருந்து கடன் பெறுவதை இலகுவாக்கியது.

நம்நாட்டில் தங்கநகைகள் வாங்கி வைத்திருப்பது சேமிப்பு என்று கருதப்படுகிறது. அதேபோல மேலை நாடுகளில் வீடு வாங்குவதே முதன்மையான சேமிப்பு எனக் கருதப்படுகிறது. குறைந்த வட்டியில் கடன்கள் இலகுவாகப் பெற்றுக் கொள்ளக்கூடிய சூழல் நிலவியதால் பலரும் வங்கிக் கடன் பெற்று வீடுகளை வாங்கினர். இதனால் வீட்டு விலை அதிகரித்தது. அதனையடுத்து வீடுகளில் முதலிட்டால் பெரும் லாபம் ஈட்டலாம் என ஆசைப்பட்டு குறைந்த வருமானமுடையவர்களும் வங்கியில் கடன்பட்டு வீடுகளை வாங்கினர். பணமீட்டுவதிலேயே குறியாக இருந்த வங்கிகளும் இந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி பலருக்கும் வீட்டுக்கடன்களை வழங்கின. இக்கடன்களுக்குப் பிணையாக அவ்வீடுகளின் உறுதிப் பத்திரங்களை தம்வசம் வைத்திருந்தன.

இக்கடன்களில் பெரும்பாலானவை முதல் ஐந்து வருடங்களுக்கு குறைந்த வட்டியிலும் அந்த ஐந்து வருட முடிவில் இரு மடங்கு அல்லது மூன்று மடங்கு வட்டி வீதத்தைக் கொண்டவையாக ஒழுங்கமைக்கப்பட்டிருந்தன. ஆனால் கடன் பெற்றவர்கள் பலருக்கு இது தொடர்பான போதிய விளக்கம் இருக்கவில்லை. அதைப் பற்றியெல்லாம் வங்கி முகவர்கள் கவலைப்படவில்லை. வல்லூறுத்தனமாக அப்பாவி மக்களின் ஏமாறும் தன்மையை பயன்படுத்தி வீட்டுக் கடன்களை அவர்களுக்கு முகவர்கள் வழங்கினர். அம்மக்கள் நிரந்தர வருமானம் உடையவர்களா அவர்களால் உயர்ந்த வட்டி வீதத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த முடியுமா என்றெல்லாம் அவர்கள் பார்க்கவில்லை.

இவ்வாறு வழங்கப்பட்ட கடன்களின் முதல் ஐந்து வருட முடிவில் வட்டி விகிதம் எகிறியது. கடன்பட்டவர்களில் பெரும்பான்மையினரான குறைந்த வருமானமுள்ள குடும்பங்கள் மாதாந்தம் வீட்டுக்கடன் கொடுப்பனவுகளை கட்ட முடியாமல் திண்டாடினர். கடனைக் கட்டுமாறு வங்கிகள் அவர்களை நெருக்கின. தம்மிடமுள்ள குறைந்தபட்ச சேமிப்புக்களைக் கொண்டாவது கடனை செலுத்த பலர் முயன்றனர். பலர் தம்மிடமுள்ள பொருட்களை விற்று கடனை அடைக்க முயற்சித்தனர். அவற்றுக்கான சாத்தியங்கள் எல்லாம் அருகிப் போன பலர் சொல்லாமல் கொள்ளாமல் வீடுகளை விட்டு வெளியேறினர். அவர்கள் தாம் வங்குரோத்து அடைந்து விட்டதாகப் பிரகடனப்படுத்தி தமது கடன்களை இரத்துச் செய்யுமாறு வங்கிகளைக் கோரினர். மேலும் பலர் வீட்டுக் கடனைச் செலுத்தாமலே வீடுகளில் இருக்க முற்பட்டனர். வங்கிகள் அவர்களை பொலிஸ் உதவியுடன் வீட்டை விட்டு வெளியேற்றி நடுத்தெருவில் தள்ளின.

இவ்வாறாக கைவிடப்பட்ட வீடுகளின் எண்ணிக்கை அதிகமான நிலையில் வீட்டு விலைகள் சரிந்தன. அதேவேளை இந்த வீட்டுக்கடன்களினால் வரக் கூடிய வருமானத்தை முன்னிறுத்தி அவ்வீட்டுக்கடன் அடமானப் பொதிகளை அமெரிக்காவிலும் ஏனைய நாடுகளிலும் உள்ள நிதி நிறுவனங்களுக்கு வீட்டுக்கடன் வழங்கிய வங்கிகள் விற்றிருந்தன. உலக மயமாக்கப்பட்ட பொருளாதாரக் கட்டமைப்பில் இது சாதாரணமாக நடக்கும் ஒன்று. இதன் மூலம் இந்தக் கடன்களால் வரக் கூடிய அபாயங்களை அவ்வங்கிகள் பல்வேறு நாடுகளிலுமிருந்த நிதி நிறுவனங்களுக்கு கடத்தி விட்டிருந்தன. அமெரிக்காவில் வீட்டு விலைகள் உச்சத்தில் இருந்த போது வாங்கப்பட்ட இந்த அடமான பொதிகள் அங்கு வீட்டு விலைகள் சரிந்து விட்ட நிலையில் பெறுமதியில் பாரிய வீழ்ச்சியை அடைந்தன.

இவ்வாறாக அமெரிக்காவில் நடந்த வீட்டுக் கடன் பிரச்சனை பல உலகநாடுகளிலுமிருந்த நிதி நிறுவனங்களை நட்டத்துக்குள் தள்ளியது. இது அந்த நிதி நிறுவனங்களில் முதலிட்டிருந்த உள்ளூர் அரசாங்கங்களைப் பாதித்தது. அதனையடுத்து உலகப் பொருளாதாரமே 2007-2009 ஆண்டுகளில் ஒரு தேக்க நிலைக்குத் தள்ளப்பட்டது. பல வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டன. பலர்

வேலையிழந்தனர். பல நாடுகளிலும் தமது ஓய்வு காலத்துக்கென பல்வேறு நிதிநிறுவனங்களில் முதலிட்டி ருந்த பணத்தை பலர் இழந்தனர்.

பெரிய பெரிய வங்கிகளின் பணமீட்டும் பேராசை காரணமாக, அவ்வங்கிகள் அதன் முகவர்களுக்கு திட்ட மிட்ட ரீதியில் வழங்கிய அதிகாரங்கள் காரணமாக அமெரிக்காவின் சாதாரண மக்கள் பொருளாதார நெருக்கடிக்கு உள்ளாக்கப்பட்டார்கள். அவர்கள் மட்டு மல்லாமல் ஏனைய பல அரசாங்கங்களும் நிதி நிறு வனங்களும் பெரும் நட்டத்தைச் சந்தித்தன. இதனை யடுத்து வங்கிகளின் நடவடிக்கைகளைக் கண்காணிப் பதற்கும் அவற்றை மேலும் இறுக்கமாக நெறிப்படுத் தவும் சட்டங்களை அமெரிக்க அரசாங்கம் இயற்றியது. இதனூடாக வங்கிகள் பொறுப்பற்ற முறையில் கடன்களை வழங்கி மக்களைச் சூறையாடுவது தடுக்கப்பட்டது.

இது இவ்வாறு இருக்க வரலாற்றில் சிறிது பின் னோக்கிச் செல்வோம். 1970 களில் உலகிலேயே மிகவும் வறிய நாடாக பங்களாதேஷ் இருந்தது. அங்கு பொருளா தாரப் பேராசிரியர் முகமது யூனஸ் 1976 ஆம் ஆண்டு கிராமீன் வங்கித் திட்டம் (Grameen Bank Project) ஒன்றை ஆரம்பித்தார். அதுவரை கந்து வட்டிக்காரர் களிடம் கடன் வாங்கிக் கொண்டிருந்த வறிய தொழில்முனைவோர்களுக்கு வங்கி கடன்களை வழங்கு வதற்கான சாத்தியப்பாடுகளை ஆராய்வதே இவரது நோக்கம்.

அவர் முதலாவதாக தனது ஊரிலேயே பிரம்புக் கதிரைகளைப் பின்னி விற்கும் ஒரு பெண்ணுக்கு ஒரு சிறு தொகைப் பணத்தை நுண்கடனாக வழங்கினார். இக்கடன் மூலம் அப்பெண் தனது மூலப் பொருட்களை வாங்கி கதிரைகளை பின்னி அவற்றை விற்பதனால் கிடைத்த இலாபத்தில் பெரும் பகுதியை கடனை அடைக்கப் பயன்படுத்த முடிந்தது. அதுவரை கந்து வட்டிக் காரர் அறவிட்ட அதிக வட்டி விகிதம் காரணமாக அப் பெண்ணுக்குக் கிடைத்த இலாபத்தில் பெரும் பகுதி வட்டி செலுத்தவே பயன்பட்டுக் கொண்டிருந்தது.

இதையே முன்னுதாரணமாக வைத்து மேலும் பல நுண்கடன்களை குறைந்த வட்டி விகிதத்தில் கிராமீன் வங்கியூடாக வழங்கி அக்கடன்களை மீளப் பெறுவதில் வெற்றியடைந்தார். உலகிலேயே முதலாவதான வறிய தொழில்முனைவோருக்கு அடமானமில்லாமல் கடன் வழங்கும் நிறுவனமான கிராமீன் வங்கியை பங்களா தேஷ் அரசாங்கம் அங்கீகரித்தது. 2008 வைகாசி மாதமளவில் இவ்வங்கியில் கடன்பெறுவோர் தொகை 7.5 மில்லியன் ஆகவும் இவர்களில் கடனை மீளச் செலுத்தி முடிப்பவர்களின் எண்ணிக்கை 98 சத வீதமாகவும் இருந்தது. கிராமீன் வங்கி திட்டத்தின் வெற்றி காரணமாக 2006 இல் பொருளாதாரத்துறைக்கான நோபல் பரிசு பேராசிரியர் முகமது யூனசுக்கு வழங்கப்பட்டது.

கிராமீன் வங்கித் திட்டத்தின் முதுகெலும் பாக இருப்பது நுண்கடன் வழங்குவதில் அவர்கள் காட்டும் அவதானம் தான். ஒருவருக்கு கடன் வழங்க முன்னர் அக்கடனைப் பெறுபவரின் தொழில்முயற்சி பற்றியும் அவரது கடனை மீளச்செலுத்துகைக்கான ஆற்றல் பற்றியும் அவர்கள் போதிய ஆராய்ச்சிகளை மேற்கொள்கிறார்கள். இதனாலேயே பங்களாதேஷின் 82,072 கிராமங்களில் அவர்களது கடன் திட்டங்கள் வெற்றிகரமாக இயங்குகின்றன.

இன்று பல நுண்கடன் நிறுவனங்கள் கிராமீன் வங்கி திட்டத்தை முன்மாதிரியாக வைத்து இயங்கி வருகின்றன. ஆனால் சில வங்கிகள் எந்த உயரிய நோக்கத்துக்காக இந்த நுண்கடன் திட்டம் ஆரம்பிக்கப் பட்டதோ அந்த நோக்கத்துக்கு எதிர்மாறாக செயற்பட்டு வருகின்றன. இவ்வங்கிகள் நுண்கடன் எண்ணக் கருவையும் தமது பணம் சம்பாதிக்கும் பேராசைக்காக பலியிடுகின்றன.

இக்கட்டுரையின் ஆரம்பத்தில் அமெரிக்க வங்கிகள் எவ்வாறு அப்பாவி உழைக்கும் மக்களை திட்டமிட்ட ரீதியில் கடன் சுமைக்குள் தள்ளி அவர்களை சூறையாடின எனப் பார்த்தோம். கடன் வாங்குபவர் அதனை மீளக்கட்டுவதற்கான ஆளுமையுடையவரா என்றெல்லாம் அவர்கள் ஆராயவில்லை. ஒருவரைக் கடனாளியாக்கி அதனூடாக கிடைத்த அடமானப் பொதியை இன்னொரு நிதி நிறுவனத்துக்கு விற்பதிலேயே அவர்கள் குறியெல்லாம் இருந்தது. இதனால் இறுதியில் பாதிக்கப்பட்டது அப்பாவி மக்களும் ஏனைய நிதி நிறு வனங்களும் தான். இவ் வங்கிகள் அல்ல. அதன் முகவர்கள் அல்ல.

அதேவேளை அமெரிக்கா போன்ற மேலை நாடுகளில் ஒருவர் அளவுக்கதிகமான கடன் சுமையால் அழுத்தப்பட்டு அதனைக் கட்டமுடியாமல் போகுமிடத்து தான் வங்குரோத்து (bankruptcy) அடைந்து விட்டதாக பிரகடனப்படுத்த முடியும். இப்பிரகடனம் பல்வேறு சட்டதிட்டங்களுக்கு அமைய மேற்கொள்ளப்படும். அவ்வாறு செய்யப்படுமிடத்து அக்கடன்களில் பெரும் பகுதியிலிருந்து குறிப்பிட்ட நபர் விடுதலையடைய முடியும். அவரது முழுக்கடன் சுமையுமே இரத்துச் செய்யப்படு வதற்கான வாய்ப்புக்களும் உள்ளன. அதனால் வரும் நட்டத்தை கடன் கொடுத்த வங்கிகளே ஏற்க வேண்டும்.

**“நுண்கடன் திட்டம் ஒரு உன்னதமான எண்ணக்கரு. சில வங்கிகளின் தவறான நடத்தைகளால் ஒட்டு மொத்த நுண்கடனே தவறானதென கூறிவிட முடியாது”**

வீட்டுக்கடன் எடுத்தவர்களில் பெரும்பாலாலானவர்கள் கடனைக் கட்டமுடியாமல் போன சந்தர்ப்பங்களில் இந்த சட்டப் பாதுகாப்பைப் பயன்படுத்தியே சிறை செல் வதிலிருந்தோ அபராதம் செலுத்துவதிலிருந்தோ தப்பித் துக் கொண்டனர்.

துரதிஷ்டவசமாக கடன் பெறுவோருக்கான இவ்வாறான சட்டரீதியான பாதுகாப்புக்கள் இலங்கை போன்ற வளர்ந்து வரும் நாடுகளில் இல்லை. அது பணம் சம்பாதிப்பதை ஒரே நோக்கமாக கொண்ட வங்கி களுக்கு வாய்ப்பாகப் போய் விட்டது. அதேவேளை கடன் வாங்கி விட்டு அதனை திருப்பிக் கட்டாவிட்டால் அது ஒரு அவமானகரமான செயலாக கருதப்படுகிறது. குறிப்பாக இலங்கையின் வடக்கு கிழக்கு மாகாணங் களில் இது சமூகத்தில் ஒருவரின் அந்தஸ்த்தை குறைக்கும் செயலாகப் பார்க்கப்படுகிறது. எமது இறுக்கமான சமூகக் கட்டுக்கோப்புக் காரணமாக இச்செயலைச் செய்வோர் அதிகளவு மனவுளைச்சலுக்கு ஆளாகிறார்கள்.

இதனை மேலும் சிக்கலாக்குவதற்கு இங்குள்ள நுண்கடன் வங்கிகள் மிகவும் கீழ்த்தரமான கடன் வசூலிப்பு உத்திகளைக் கையாளுகின்றன. கடனைத் திருப்பிச் செலுத்த முடியாத ஒருவரை அவர் சார்ந்த சமூகத்தில் அவமானப்படுத்தப் போவதாக பயமுறுத்து கின்றனர். அவ்வாறான முன் நடவடிக்கைகளிலும் ஈடுபடு கின்றனர். இவ்வாறான முயற்சிகளை கடன்பட்டோர் மீது மேற்கொள்ள மேலைநாட்டு சட்டங்கள் இடமளிப்ப தில்லை. ஆனால் இங்கோ நிலைமை தலை கீழ். **சட்டப் பாதுகாப்பின்மை ஒருபுறம். சமூகத்தில் வரக்கூடிய அவப்பேர் தொடர்பான மனவுளைச்சல் மறுபுறம். இதனால் எப்பாடுபட்டாவது கடன் பட்டவர் கடனை திருப்பிச் செலுத்துவார் என்று வங்கிகள் நம்புகின்றன.** கடன் பெற்றோர் கடனைத் திருப்பிச் செலுத்தாத பட்சத்தில் அவர்களை சமூக கலாச்சார அடிப்படையில் கையாள் வதற்கான வழிமுறைகள் அவர்களிடம் உள்ளன. அதனால் கடன் வழங்க முன்னர் கடன் பெறுனர் தொடர்பாக போதிய ஆராய்ச்சிகளை அவர்கள் செய்வதில்லை.

இந்த இரக்கமற்ற வல்லூறுத்தனமான நுண்கடன் வங்கிகளினதும் அவர்களது முகவர்களினதும் செயற் பாடுகளை சென்ற நிமிர்வு இதழில் வந்த கட்டுரை ஒன்றில் பார்த்தோம். அவர்களின் நடவடிக்கைகள் போரினால் பாதிக்கப்பட்ட பின்னர் நிமிர நினைக்கும் ஏழைத்தமிழ் மக்களை இலக்கு வைத்து நடத்தப் படுவதைப் பார்த்தோம். அதனால் தற்கொலை உட்பட அம்மக்கள் அடையும் பாதிப்புக்களையும் பார்த்தோம்.

அதேவேளை இந்தக் கட்டுரையின் இரண்டாம் பாகத்தில் ஒரு ஏழை நாட்டின் 97 வீதமான கிராமங்கள் நுண்கடன் வங்கிகளால் பயன்பெறுவதையும் நாம் கண்டோம். அங்கே கடன் திருப்பிச் செலுத்துகை 98 சதவீதமாக இருப்பதையும் கண்டோம். அப்படியானால், இந்த உயரிய எண்ணக்கருவைக் கொண்ட நுண்கடன் திட்டம் எமது பகுதிகளில் உயிர்களைப் பலியெடுக்கும் அளவிற்குப் பிழைத்து போனதன் காரணம் என்ன? இதற்கான சூத்திரதாரிகள் யார்?

எமது சமூக கலாச்சாரப் பின்புலங்களை தமது பக்கபலமாக வைத்துக் கொண்டு மக்கள் எவ்வாறான இன்னல்களுக்குள் இருந்தாலும் தமது இலாபத்தை மட்டும் ஒரே குறிக்கோளாக கொண்டு இயங்கும் வங்கிகளே இதற்கு காரணம். அவர்களை மட்டுப்படுத்த சட்டத்தில் இடமில்லாமல் இருப்பதே இதற்கு காரணம். இருக்கும் சட்டங்கள் கூட அமுலாக்கப்படாமல் இருப்பதுவும் இதற்கு காரணம். தமது அரசியல் பொருளாதார லாபம் கருதி இந்த வங்கிகளை சட்டரீதியில் கட்டுப்படுத்தாமல் இருக்கும் தென்னிலங்கை அரசியல்வாதிகளும் இதற்குக் காரணம்.

நுண்கடன் திட்டம் ஒரு உன்னதமான எண்ணக்கரு. வங்கிகளின் தவறான நடத்தைகளால் ஒட்டுமொத்த நுண் கடனே தவறானதென கூறிவிட முடியாது. பொருத்தமான வழியில் நடைமுறைப்படுத்தப்பட்டால் அது எமது பொருளாதார வளர்ச்சிக்கு பெரும் பங்காற்ற முடியும். அது எமது பொருளாதார சூழலுக்கு ஏற்றவாறும் பாரம் பரியத்துக்கும் கலாச்சாரத்துக்கும் ஏற்றவாறும் நடை முறைப்படுத்தப்பட வேண்டும். நுண்கடன் வங்கிகள் மிகவும் நெருக்கமாக கண்காணிக்கப்பட வேண்டும். வங்கிகளைக் கட்டுப்படுத்துவதற்கும் கடன்பட்டோரைப் பாதுகாக்கவும் சட்டங்கள் இயற்றப்படவேண்டும்.

மேலும் நுண்கடன் வங்கிகள் பணம் சம்பாதிப்பதை மட்டுமே நோக்கமாக கொண்டிராது சமூக அக்கறை யுடன் செயற்பட வேண்டும். கடன் வழங்குவதோடு நின்று விடாது கடனுடன் சேர்த்து கடன் பெறுபவர் களின் தொழில் முயற்சிகளை வெற்றிப்பாதைக்கு இட்டுச் செல்லும் ஆளுமையை வளர்க்க திட்டங்கள் வங்கி களால் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். கடன் வசூலிக்க முகவர்களை அனுப்புவதை விடுத்து இத் திட்டத்தில் எந்த அளவுக்கு முன்னேற்றம் பெறப்பட்டுள்ளது என்பதைக் கணக்கிடவும் பின்னடைவுகளை ஏற்படு மிடத்து அதனை நிவர்த்தி செய்ய பயிற்சியாளர்களை அனுப்ப வேண்டும்.

ஒருவனுக்கு மீனை வழங்கினால் அது அவனுக்கு ஒரு நாள் பசியை மட்டுமே தீர்க்கும் அவனுக்கு மீன் பிடிக்க கற்றுக் கொடுத்தால் அவனின் வாழ்நாள் முழு வதுமே பசி தீரும். ஆகவே கடனை மட்டும் வழங்கா தீர்கள் அக்கடனை எவ்வாறு திருப்பிச் செலுத்துவதென கற்பித்தும் விடுங்கள்.

# நிபந்தனையற்ற விடுதலையே தேவை

## பொது மன்னிப்பும் புனர்வாழ்வும் அல்ல




தொகுப்பு – துருவன்

அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையம் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறையின் சமகால சட்ட விடயங்களுக்கான அரங்கத்தோடு இணைந்து வழங்கிய 'அரசியல் கைதிகளின் விடுதலை: முழுமையான சட்டக் கொள்கை நிலைப்பாட்டை நோக்கி' எனும் கலந்துரையாடல் 01.06.2018 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு யாழ். பல்கலைக்கழகத்தின் கலைப்பீட மண்டபத்தில் இடம்பெற்றது

அதில் பிரதான உரையினை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சட்டத்துறைத் தலைவரும், அடையாளம் கொள்கை ஆய்வுக்கான நிலையத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளருமான குமாரவடிவேல் குருபரன் நிகழ்த்தியிருந்தார். அதற்கு பதிலுரையினை அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் தலைவர் அருட்தந்தை சக்திவேல் வழங்கியிருந்தார். அந்த பதிலுரையினை இங்கே தொகுத்து தருகிறோம்:

நான் சர்வதேச சட்டங்களையோ அல்லது உள்ளூர் சட்டங்களையோ கற்றறிந்த ஒரு ஆசிரியன் அல்ல. வீதியிலே சத்தம் போட்டுக் கொண்டிருப்பவன். இது தான் எனக்கு இருக்கின்ற தகுதி. இந்த சந்தர்ப்பத்தில் என்னுடைய அனுபவங்களை பகிர்கிறேன். கடந்த பத்து பதினைந்து வருட காலமாக அரசியல் கைதிகள் இந்த நாட்டிலே இருக்கின்றார்கள். அவர்கள் நிபந்தனையின்றி விடுதலை செய்யப்பட வேண்டும் என்பதுதான் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் அடிப்படைக் கோரிக்கை. இப்போது நாங்கள் கலந்துரையாடிக் கொண்டிருக்கின்ற இந்த சந்தர்ப்பம் மிக முக்கியமானது.

கடந்த மாதம் இங்கிலாந்துக்கு சென்ற ஜனாதிபதி மைத்திரிபால பிபிசி சந்தேசிய என்று சொல்லப்படுகின்ற சிங்கள சேவைக்கு வழங்கிய ஒரு நேர்காணலில் குறிப்பிடுகின்றார் "இந்த நாட்டில் அரசியல் கைதிகள் என்று யாரும் கிடையாது." அடுத்ததாக குறிப்பிடுகின்றார் தமிழ், சிங்கள புதுவருடத்தின் போது 560 ஏக்கர் காணிகளை அன்பளிப்பாக தமிழ் மக்களுக்கு கொடுத்திருக்கின்றோம் என்று. மூன்றாவதாக குறிப்பிட்டிருந்தார் "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் என்று எவரும் இல்லை என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் இவர்களை தேடுவதாக கூறி போராட்டம் நடத்துபவர்கள், இனவாதிகள், டயஸ்போராக்கள், என்ஜீயோக்கள்." மிக பாராதூரமான குற்றச்சாட்டுக்களை முன்வைத்திருக்கின்றார். எங்களுடைய காணிகளை இராணுவம் பறித்திருக்கின்றது. அந்தக் காணிகளை விடுவிக்குமாறு நாம் கேட்டுக்கொண்டிருக்கிறோம். ஜனாதிபதி தமிழ் மக்களுக்கு தெற்கிலிருந்து 560 ஏக்கர் காணியை கொடுத்திருந்தால் அதை அன்பளிப்பு என்று கூறலாம். ஆனால் எங்களுடைய காணிகளை மீண்டும் கொடுத்து விட்டு தமிழ், சிங்கள புதுவருடத்திற்காக அன்பளிப்புச் செய்தோம் என்றால் இதனை நாம் எவ்வாறு ஏற்றுக் கொள்ள முடியும்? "காணாமல் ஆக்கப்பட்டவர்கள் உயிரோடு இல்லை என்று அனைவருக்கும் தெரியும். ஆனால் போராட்டம் நடத்திக் கொண்டிருப்பவர்கள் இனவாதிகள், டயஸ்போராக்கள், என்ஜீயோக்கள்" என்று அடுத்த குற்றச்சாட்டை முன் வைக்கின்றார். நாங்கள் கேட்டது நீதி. இந்த நீதியை மறுக்கின்றார். அரசியல் கைதிகள் இந்த நாட்டிலே இல்லை என்று கூறுவதன் மூலம் சொல்ல வருகின்ற செய்தி எங்களுடைய அரசியல் போராட்டத்தையே ஒரு பயங்கரவாதம் ஆக்குகின்றார். இவரோடு சேர்ந்து இராஜித சேனரட்ன அவர்களும் "அரசியல் கைதிகள் என்று யாரும் கூறக் கூடாது" எனக் கூறி அரசியல் ரீதியாக எங்களை அடக்குகின்றார், அதட்டுகின்றார். அதைப் போன்று சம்பிக்க ரணவக்க அதே காலகட்டத்தில் கூறுகின்றார் "அரசியல் கைதிகள் என்று யாரும் கிடையாது எல்லோரும் பயங்கரவாதிகள்" என்று.

இந்தப் பின்னணியில் இருந்து கொண்டுதான் நாங்கள் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பாக உரையாடிக் கொண்டிருக்கின்றோம். என்னைப் பொறுத்த வரையில் இந்த பயங்கரவாத தடைச்சட்டமே ஒரு பயங்கரவாதம் தான். இதற்கு மனித முகம் கிடையாது. இந்த

பயங்கரவாத தடைச்சட்டம் கொண்டு வரப்பட்டது ஏன்? அரசு பயங்கரவாதத்தை மறைப்பதற்காகத் தான். அரசு தன்னுடைய பயங்கரவாதத்தை மறைப்பதற்காக தான் பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டு வந்து எங்களை பயங்கரவாதிகள் ஆக்கிவிட்டது. இது அரசியல். அரசு தன்னுடைய பயங்கரவாதத்தை மிக நீண்டகாலமாக நிறைவேற்றிக் கொண்டு வருகின்றது. அதன் ஒரு கட்ட மாகத்தான் நாங்கள் தற்காப்பு நிலை எடுக்கின்றோம். இந்த தற்காப்பு நிலையில் நாங்கள் எடுத்த நடவடிக்கை களை பயங்கரவாதமாக்கி அந்த பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழே எங்களை இன்று வரை வெளியே வரவிடாமல் தடுத்து வைத்திருக்கின்றது.

இந்தப் பயங்கரவாத தடைச்சட்டம் தொடர்பாக விரிவுரையாளர் குருபரன் ஆழமாக அறிந்திருக்கின்றார். இதற்கு மனிதமுகம் கிடையாது என்று குறிப்பிட்டிருந்தேன். ஏனென்றால் ஒருவரை கைது செய்த பின்னர் தான் அவர் மீது குற்றங்கள் சுமத்தப்படுகின்றன. குற்றத்திற்காக யாரும் கைது செய்யப்படவில்லை. தடுத்து வைக்கும் காலமும் அவ்வாறு தான். அதுமட்டுமல்ல ஒப்புதல் வாக்குமூலம் பற்றி பார்ப்போம். பல்வேறுவிதமான துன்புறுத்தலுக்கு மத்தியிலே உடலில் பல்வேறு பாகங்கள் உடைந்து நொருங்கிய நிலையிலே அவர்களுக்கு தெரியாத மொழியிலே இந்த ஒப்புதல் வாக்குமூலங்கள் பெற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. அதுமட்டுமல்ல இன்னும் சிலரிடம் ஒப்புதல் வாக்குமூலம் பெறப்பட்டதாகக் கூறப்பட்ட போதும் அவர்களிடம் கையொப்பமே பெறப் படவில்லை என்று கண்டி பல்லகலயில் இருக்கின்ற அரசியல் கைதிகள் கூறுகின்றார்கள். எங்கள்மீது இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தைப் பாவித்து ஒப்புதல் வாக்குமூலம் பெற்றதாக கூறப்படுகின்றது. ஆனால் நாங்கள் எங்கும் கையொப்பம் வைக்கவில்லை என்று கூறுகின்றார்கள்.

ஆனந்தசுதாகரனின் வழக்கை எடுத்துப் பார்ப் போமானால் அவருக்கு எதிராக சட்டமா அதிபர் திணைக்களம் 199 குற்றச்சாட்டுக்களை சுமத்தி விட்டது. 199 குற்றச்சாட்டுக்களில் வழக்கு ஆரம்பித்து நடைபெறுகின்ற போது 104 குற்றச்சாட்டுக்களை சட்டமா அதிபர் திணைக்களத்தினர் மீளப் பெற்றுக் கொண்டார்கள். அப்படியென்றால் இந்த 104 குற்றச்சாட்டுக்களை அவர்கள் எந்த ரீதியில் சுமத்தினார்கள்? மீண்டும் அவற்றை ஏன் மீளப் பெற்றுக் கொண்டார்கள்? சாட்சிகள் இல்லாது அடையாளம் இல்லாது தான்தோன்றித்தனமாக இந்த சட்டத்தை பாவித்து அவர்கள் குற்றச்சாட்டுகளை சுமத்துகின்றார்கள். அதுமட்டுமல்ல ஆனந்தசுதாகரனு டைய மனைவி நோயின் காரணமாக இயற்கை மரணம் எய்தினார் என்பதுதான் பொதுவான கருத்து. ஆனால் அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பாக நாங்கள் கூறுகின்றோம்: பயங்கர வாத தடைச்சட்டமும் சட்டமா அதிபர் திணைக்களமும் ஆனந்தசுதாகரனின் மனைவியைக் கொலை செய்தது! ஏனென்றால் இவருக்கெதிராக சுமத்தப்பட்ட குற்றச் சாட்டுக்கள் 95 அதில் ஒரு குற்றச்சாட்டுக்கு 10 வருட கடூழிய சிறைத்தண்டனை. மிகுதி இருக்கின்ற 94 குற்றச் சாட்டுக்களுக்கு 94 ஆயுட்கால சிறைத்தண்டனை கொடுக் கின்றார்கள். ஒருநபருக்கு 94 ஆயுள்கால சிறைத் தண்டனை. ஒருவருக்கு ஒரு ஆயுள்கால சிறைத் தண்டனை கொடுப்பது என்பது வேறு. 94 ஆயுள்கால சிறைத்தண்டனை கொடுப்பது எந்த மனித சட்டத்தின்படி ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும் என்பது எங்களுடைய கேள்வி.

**மனிதாபிமானம் என்பது இதில் கிடையாது. இவருடைய மனைவி ஏற்கனவே நோய் வாய்ப்பட்டவர். தன்னுடைய கணவருடைய வருகையை எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றார். இவருடைய இரண்டாவது பிள்ளை இவர் சிறைக்கு போகும் போது 10 மாதங்கள் என்று நினைக்கிறேன். மகனுக்கு 3 வயது, திருமணம் செய் கின்ற போது 26 வயது. தன்னுடைய கணவர் வருவார் என்று இளம்பெண்ணான அவர் மனைவி எதிர்பார்த்து கொண்டிருந்திருக்கிறார். தீர்ப்பு கொடுத்த பின்னர் தான் இவர் அதிகமாக நோய்வாய்ப்படுகின்றார். மீண்டும் வரமாட்டார் என்பது தெரியும். மீண்டும் நான் என்னுடைய கணவரை சந்திக்கமாட்டேன். என்னுடைய பிள்ளை களுக்கு தகப்பன் கிடையாது. இந்த நிலையில் அவர் இறக்கின்றார். எனவே இது இயற்கை மரணமா? அல்லது கொலையா? அரசியல் கைதிகளை விடுதலை செய்கின்ற தேசிய அமைப்பாக நாங்கள் கூறுகின்றோம்: இது சட்டமா அதிபர் திணைக்களமும் பயங்கரவாத தடைச்சட்டமும் இணைந்து நடத்திய ஒரு கொலை!**

அதே காலகட்டத்திலே வவுனியாவைச் சேர்ந்த அரசியல்கைதி ஒருவர் இறக்கின்றார். அவர் 8 வருட காலமாக சிறையிலே இருக்கின்றார். இவர் மீது இரண்டு குற்றச்சாட்டுக்கள் அந்த குற்றச்சாட்டுக்களுக்கு தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார். ஒருவருடம்

**"அரசு தன்னுடைய பயங்கர வாதத்தை மறைப்பதற்காக தான் பயங்கரவாத தடைச் சட்டத்தை கொண்டு வந்து எங்களை பயங்கரவாதிகள் ஆக்கிவிட்டது"**

முடிவடைகின்றது. அவர் நினைக்கின்றார் இன்னும் ஒருவருடத்தில் நான் வீட்டுக்கு போகலாம் என்று. கைது செய்யப்படுகின்ற போது 49 வயது. இப்பொழுது 58 வயதாகின்றது. இவருடைய மனைவியும் அதே வயதில் இருக்கின்றார். குற்றச்சாட்டு சுமத்தப்பட்டு தண்டனை யில் ஒரு வருடம் முடிந்த நிலையிலே அவர்மீது இன்னொரு வழக்கு சுமத்தப்படுகின்றது. இன்னொரு வழக்கு சுமத்தப்படுவதற்கு சட்டமா அதிபர் திணைக்களம் எடுத்துக் கொண்ட காலம் 8 வருடமாக இருக்கின்றது. இந்த நிலையிலே தான் அவர் பாதிக்கப்படுகின்றார். கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு அங்கே இறக் கின்றார். இதனை நாங்கள் என்னவென்று கூறுவது? இதனை நாம் சட்டமா அதிபர் திணைக்களமும் பயங்கரவாத தடைச்சட்டமும் இணைந்து நடாத்திய ஒரு கொலை என்று தான் குறிப்பிடுகின்றோம்.

இப்பொழுது எங்களுடைய நாட்டில் அரசியல் கைதி களுடைய விடயம் என்பது அரசியல் விடயமாக இருக்கின்றது. அரசியல் விடயமாக இருப்பதை நாங்கள் சட்டரீதியாக பார்த்துக் கொண்டிருக்கின்றோம். ஏனென் றால் இந்த நாட்டில் அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுவதும் ஒரு அரசியல் தான். அரசியல் கைதிகள் இந்த நாட்டில் இருக்கின்றார்கள் என்று கூறுவதும் ஒரு அரசியல் தான். மகிந்தராஜபக்ஸ ஜனாதிபதியாக இருந்த போது 12000 விடுதலைப்புலி உறுப்பினர்கள் புனர் வாழ்வு அளிக்கப்பட்டு அவர்கள் விடுதலை செய்யப்பட்டி ருந்தார்கள். இன்னும் 600 பேர் வேறொரு கால கட்டத்தில் கொழும்பில் பழைய பாராளுமன்றத்திற்கு அழைத்து வரப்பட்டு அங்கு விடுதலை அளிக்கப்பட்டார் கள். இவர்களை கதிர்காமம் வழியாக சிங்களப்பகுதி களால் அழைத்து வந்தார்கள். அந்தப் பிரதேசங்களை யெல்லாம் அவர்கள் சுத்திக்காட்டிவிட்டு விடுதலை செய்கின்றார்கள். பயங்கரவாதிகள் என்று சொல்லப் பட்டவர்கள் சிங்களப்பகுதிக் அழைத்து செல்லப்படு கின்றார்கள். சிங்கள மக்கள் எவரும் இவர்கள் பயங்கர வாதிகள் என்று இவர்களது பாதையை மறிக்கவில்லை. இவர்கள் சென்ற வாகனத்திற்கு கல் எறியவுமில்லை. அவர்கள் விடுதலை செய்யப்படுகின்றார்கள். அதே நேரம் கிழக்கு மாகாணத்தில் 600 பொலிஸாரைக் கொன்றவர் எனக் கூறப்படுகின்ற கருணா எங்கே இருக்கிறார் என்பது எல்லோருக்கும் தெரிந்த விடயம். ஆகவே அவர்கள் விடுதலை அரசியல் மயமாக்கப்பட்டது.

இதனைவிட பிரேமதாஸ ஆட்சிக்காலத்தில் விடுதலைப் போராளிகளுக்கு உணவு கொடுத்தவர்கள், வேலை செய்தவர்கள் இப்படியெல்லாம் கைது செய்யப் பட்டிருக்கின்றார்கள். என்னுடைய நண்பர் ஒருவரு டைய வீட்டிற்கு நீண்டகாலத்துக்கு பின் அவருடைய உறவினர் ஒருவர் வருகின்றார். நண்பர் வீட்டில் இல்லை. அவருடைய மனைவியும் பிள்ளைகளும் கூறுகின்றார்கள் 25 ஆண்டுகளுக்கு பிறகு நீங்கள் எங்கள் வீட்டிற்கு வருகின்றீர்கள். இன்று எங்களுடன் தங்க வேண்டும் என்று. அவர் இல்லை நான் போகவேண்டும் என்கிறார். அவர்கள் அவரை பலவந்தமாக தங்க வைக்கிறார்கள். மாலை வேளையில் அந்த வீட்டின் தகப்பன் வருகின்றார். இருவரும் இருந்து கதைத்த பின்னர் வந்தவர் சொல்லு கின்றார் தான் திரும்பி போகிறேன் என்று. இவர் தடுக்கின்றார். 25 ஆண்டுகளுக்கு அப்புறம் முதன் முறையாக கண்டிருக்கிறோம் இன்று இரவுமட்டும் தங்கி விட்டு செல்லுமாறு கேட்கிறார். அந்த இரவை அவர்களின் வீட்டிலே கழிக்கின்றார். அடுத்தநாள் விடிய அவர் செல்லு கின்றார். மூன்று கிழமைக்குப் பின்னர் பொலிஸார் வரு கின்றார்கள். இவரைத் தேடி கைது செய்கின்றார்கள். இப்பொழுது இவருக்கு ஆயுள்கால சிறைத்தண்டனை யும் 600 வருட கடுங்காவல் தண்டனையும் கொடுக்கப் பட்டிருக்கின்றது. இவர் என்ன குற்றம் செய்தார் என்று இவருக்கே தெரியாது. 25 வருடங்களுக்கு முன்பு தான் சந்தித்த ஒருவர், ஒன்றாக வாழ்ந்த ஒருவர் வந்தார். அவரை வீட்டிலே தங்க வைத்து உணவு கொடுத்தது மட்டும்தான் இவர் செய்தது. இப்பொழுது அவர் கொழும்பிலே இறுதிக்காலத்தை கழித்துக்கொண்டிருக் கின்றார். தலதாமாளிகை குண்டு வெடிப்போடு சம்பந்தப் படுத்தி தான் அவரை கைது செய்தார்கள். இவர் குண்டைக் கண்டதும் இல்லை. குண்டு கொண்டு வந்தவரின் கையில் என்ன இருந்தது என்றும் தெரியாது. தூங்குவதற்கு இடம் கொடுத்திருக்கின்றார் என்பதற்காக அவருக்கு கொடுக்கப் பட்ட தண்டனை எந்த வகையில் நியாயமானது?

பிரமேதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது இயக்கத்திற்கு இலட்சக்கணக்கிலே பணம் கொடுத்தார், ஆயுதங்களைக் கொடுத்தார் என்று பாராளுமன்றத்திலே கதைக்கப்பட்டிருக்கின்றது. இவர் செய்தது பயங்கரவாத செயலா? அல்லது அரசியலா? அதனை கட்சி ஏற்றுக் கொள்கின்றது. அதே போன்று மகிந்த ராஜபக்ஸ இயக்கத் திற்கு பணம் கொடுத்ததாக தென்னிலங்கை ஊடகங்களே பகிரங்கமாக எழுதின. அவர் பணம் கொடுத்ததை தெற்கு ஏற்றுக் கொள்கிறது. அவர்கள் கொடுத்த ஆயுதத்தை பாவித்தவர்கள், அவர்கள் கொடுத்த பணத்தை வைத்து ஆயுதம் வாங்கியவர்கள் எவ்வாறு பயங்கரவாதிகள் ஆக முடியும்? அவர்கள் செய்தது அரசியல் என்றால் நாங்கள் செய்ததும் அரசியல் தான். **தெற்கின் ஆட்சியாளர்கள் செய்தால் அது தேசப்பற்றாளர்கள் செய்த செயலாக கருதப்படுகின்றது. எங்களுடைய சுதந்திரத்திற்காக, விடுதலைக்காக நாங்கள் செய்கின்ற செயல் பயங்கர வாதமாக பார்க்கப்படுகின்றது. இந்த பயங்கரவாத தடைச் சட்டம் பயங்கரவாதமே தவிர அதனைக் கொண்டு வந்த வர்கள் பயங்கரவாதிகளே தவிர நாங்கள் பயங்கர வாதிகள் அல்ல. அரச பயங்கரவாதத்தை மறைப்பதற்காக கொண்டு வரப்பட்டது தான் பயங்கரவாத தடைச் சட்டம்.**

பயங்கரவாத தடைச்சட்டத்தை கொண்டு வந்தவர்கள் பயங்கரவாதிகள். தமிழ் மக்களுக்கு எதிராக இன அழிப்பை மேற்கொண்டவர்கள். 2009 ஆம் ஆண்டு மட்டுமல்ல 1948 ஆம் ஆண்டிலிருந்து தொடர்ச்சியாக தமிழ் மக்களுக்கெதிராக இன அழிப்பை மேற்கொண்டவர்கள் பயங்கரவாதிகள். பயங்கரவாத கட்சிகள் தான் நாட்டை ஆண்டிருக்கின்றன. ஆண்டு கொண்டிருக்கின்றன. எனவே அவர்களை பாதுகாத்துக் கொண்டு எங்களை அச்சட்டத்துக்கு உட்படுத்தி ஒட்டுமொத்த தமிழ் சமூகத்தையும் அதன் அரசியலையும் ஒடுக்குவதற்காகத்தான் தொடர்ந்து பயங்கரவாத தடைச்சட்டம் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

அரசியல் கைதிகளை தண்டிக்க வேண்டும் என்பதுதான் இவர்களது நோக்கம். விடுதலை செய்ய வேண்டும் என்ற நோக்கம் இவர்களுக்கு கிடையாது. பயங்கரவாதிகள் என்று கூறிவிட்டு அவர்களை தண்டிப்பதற்காக இந்த பயங்கரவாத தடைச்சட்டம் இன்றைய நாள் வரையும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. இவர்கள் தண்டிக்க நினைப்பது இப்பொழுது அரசியல் கைதிகளாக இருக்கின்ற 108 பேரை மட்டுமல்ல. தமிழ் மக்களுடைய அரசியலை தண்டிக்க வேண்டும் என்பதுதான் இவர்களுடைய நோக்கம். அந்த அரசியலுக்குப் பின்னால் யார் எல்லாம் நிற்கின்றார்களோ அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்பதுதான் இவர்களுடைய நோக்கம். எனவே 108 பேர் தண்டிக்கப்படுகின்றார்கள் என்றால் நாங்களும் தண்டிக்கப்படுகின்றோம் என்றுதான் பொருள் கொள்ள வேண்டும்.

இவர்களுக்கு பொதுமன்னிப்பு கொடுக்க வேண்டும் என்று கூறுகின்றார்கள். எந்தவகையில் பொதுமன்னிப்புக் கொடுப்பது? இவர்களுக்கு பொது மன்னிப்புக் கொடுங்கள் என்று கேட்டால் இவர்கள் குற்றமிழைத்தவர்கள் என்று நாங்களே கூறுகின்றோம் இவர்கள் பயங்கரவாதிகள் என்று கூறுகின்றோம். பொது மன்னிப்பு கேட்பது என்பது எங்களுக்கு நாங்களே தண்டனை வழங்குகின்ற செயலாகத் தான் நான் கருதுகின்றேன். நாங்கள் பொது மன்னிப்பு கேட்கக்கூடாது. பொதுமன்னிப்பு அவன் கொடுக்கட்டும். நிபந்தனையற்ற விடுதலை என்பது தான் எங்களுடைய குரலாக இருக்க வேண்டும்!

அதே போன்று புனர்வாழ்வு கேட்கின்றார்கள் யாருக்கு புனர்வாழ்வு? குற்றம் செய்தவர்களுக்குத் தான் புனர்வாழ்வு. இவர்கள் குற்றம் செய்தவர்கள் என்று நாங்களே தீர்மானித்தால் அந்த அரசியலை பிழை என்று கூறுகின்றேன். வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை நாங்கள் பிழை என்றா கூறுகின்றோம்? தந்தை செல்வாவை நாங்கள் பிழை என்றா கூறுகின்றோம்? இவ்வாறு கூறிவிட்டு எங்களால் அரசியல் நடத்த முடியுமா? தந்தை செல்வா பிழை, கடந்தகால போராட்ட வரலாறு பிழை, இவர்கள் எல்லாம் பிழையானவர்கள், பயங்கரவாதிகள் இவர்களுக்கு பொதுமன்னிப்புக் கொடுங்கள். இவர்களுக்கு புனர்வாழ்வு கொடுங்கள் என்று கேட்க முடியாது. அப்படி கூறுகின்றவர்களுக்குத்தான் புனர்வாழ்வு கொடுக்கப்பட வேண்டும். எங்களுடைய அரசியல்வாதிகளுக்கு புனர்வாழ்வு கொடுக்கப்படல் வேண்டும். ஏனென்றால் அவர்களுக்கு அரசியல் தெரியாது. எங்களைக் குற்றவாளிகள் ஆக்கிவிட்டு அவர்கள் பதவிக்கு போவதற்கும் பதவியை தக்கவைக்கவும் செயற்படுகின்றார்கள். ஜனாதிபதியிடம் சென்று புனர்வாழ்வு கொடுங்கள், பொதுமன்னிப்பு கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இவர்கள் தமிழர்களாக இருக்க முடியாது. இவர்களுக்குப் பின்னால் போகின்றவர்களும் தமிழர்களும் அல்ல. இவர்களும் பயங்கரவாதிகளே தான். பயங்கரவாத தடைச்சட்டத்தை இவர்களுக்கு எதிராகத் தான் நாங்கள் பாவிக்க வேண்டும். எங்களுடைய அரசியலில் இருந்து அவர்களை நாங்கள் அகற்ற வேண்டும்.

ஆங்கிலேயருடைய ஆட்சிக்காலத்தில் ஆங்கிலேயருக்கு எதிராக செயற்பட்டவர்கள் என்று கூறி 13 பேரை தூக்கிலிட்டார்கள். 2015 ஆம் ஆண்டு ஆட்சிக்கு வந்த மைத்திரிபால சிறிசேன அவர்களை தேசப்பற்றாளர்கள் என்று கூறி வர்த்தமானியூடாக அறிவிக்கின்றார். ஒரு அரசாங்கம் பயங்கரவாதிகள் என்று கூறி தூக்கிலிடும் போது இன்னொரு அரசாங்கம் அவர்கள் தேசப்பற்றாளர்கள் என்று கூறுகிறது. 1987 ஆம் ஆண்டு இந்திய, இலங்கை உடன்படிக்கை செய்துகொள்ளப்படுகின்ற போது அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படுகின்றார்கள். எனவே அரசியல் கைதிகளின் விடயத்தை பிரேமதாசா அரசியல் மயமாக்கினார். அதேபோன்று ரணில் விக்ரமசிங்க, சந்திரிக்கா போன்று தொடர்ந்து வந்த அத்தனைபேருமே அதனை தம்முடைய அரசியலாக்கி இருக்கின்றார்கள். 12000 பேரை விடுதலை செய்தவர், அதற்கு மேலாக இன்னும் 600 பேரை விடுதலை செய்தவர் இப்பொழுது கூறுகின்றார் இவர்களை விடுதலை செய்ய வேண்டாம் அவர்கள் பயங்கரவாதிகள் என்று. இதனை அவருடைய அரசியலுக்காகவே கூறுகின்றார். அரசியல் கைதிகள் இல்லை என்று கூறுவதும் தன்னுடைய அரசியலுக்காகவே தான்.

எனவே இந்த அரசியல் சித்துவிளையாட்டுகளுக்குள்ளே நாங்கள் சிக்கிப் போயிருக்கின்றோம். இந்த அரசியல் சித்து விளையாட்டுக்குள்ளே எங்களுடைய அரசியலை முன்நகர்த்துவதற்கு இப்பொழுது தடையாக இருப்பது இந்த பயங்கரவாத தடைச்சட்டம். இந்த பயங்கரவாத தடைச்சட்டம் தமிழ் மக்களின் அரசியலை ஒடுக்குவதற்காக கொண்டுவரப்பட்டது என்பது தெரியும். இவர்கள் இன்னும் அதனை பாதுகாத்துக் கொண்டிருப்பது சிறையில்

இருப்பவர்களை தண்டிப்பதற்காகவே. இதற்குப் பதிலாக இன்னுமொரு சட்டம் கொண்டுவர இருக்கின்றார்கள் என்பதை நண்பர் கூறினார்.

அடுத்து தேசிய பொருளாதார திட்டம் ஒன்றை கொண்டு வர இருக்கிறார்கள். அந்த பொருளாதார திட்டத்தின் படி முழு நாட்டையும் அவர்கள் சிதைக்கப் போகின்றார்கள். அதற்கு கீழ் மாங்குளத்தில் கிட்டத்தட்ட மூன்று இலட்சம் பேரை குடியேற்றப்போகின்றார்களாம். புதிய குடியேற்றத்திட்டங்களை உருவாக்கப் போகின்றார்கள். முழு பௌதீக அமைப்பையும் மாற்றப்போகின்றார்கள். அதற்கு எதிராக தெற்கிலும் இளைஞர்கள் ஆயுதம் தூக்க வேண்டிய காலகட்டம் வந்து கொண்டிருக்கின்றது. எனவே பொருளாதார அபிவிருத்தி திட்டங்களை யார் எதிர்க்கின்றார்களோ அவர்களை கட்டுப்படுத்துவதற்காக கொண்டு வர இருப்பதுதான் அடுத்த சட்டம்.

**இந்த பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பாக விசேட நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டன. ஒன்று மன்னார், அடுத்தது அநுராதபுரம், இன்னொன்று கொழும்பு. மன்னாரில் நீதிமன்றம் இப்பாழுது இயங்குவது கிடையாது. அநுராதபுரத்திலே அரசியல் கைதிகளுடைய வழக்குகளை எடுப்பது கிடையாது. ஹெரோயின் விற்றதற்காக கைது செய்யப்பட்டவர்கள் அல்லது பாலியல் துஷ்பிரயோகம் செய்தவர்கள் என்று கைது செய்யப்பட்டவர்கள் தொடர்பான வழக்குகள் தான் இப்பொழுது விசேட நீதிமன்றத்தில் நடைபெறுகின்றன. எனவே இதெல்லாம் ஒரு கண் துடைப்புக்காக கொண்டுவரப்பட்ட விசேட நீதிமன்றங்கள். நாங்கள் கேட்பது விசேட நீதிமன்றங்கள் அல்ல. நாங்கள் கேட்பது புனர்வாழ்வும் அல்ல. நாங்கள் கேட்பது பொது மன்னிப்பும் அல்ல. நாங்கள் அரசியல் தளத்திலிருந்து கேட்கின்றோம். இவர்கள் அனைவரையும் நிபந்தனையின்றி விடுதலை செய்ய வேண்டும்!**

நீண்ட ஒரு அறிக்கையை நாங்கள் தயாரித்து இருக்கின்றோம். பயங்கரவாத தடைச்சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்கள், அவர்கள் கைது செய்யப்பட்ட நாளிலிருந்து வழக்கிற்கு முகம் கொடுத்துக் கொண்டிருக்கின்ற நாள் வரையிலே முகம் கொடுக்கின்ற மனிதஉரிமை மீறல்கள் தொடர்பான ஒரு அறிக்கை. இந்த அறிக்கையை நாங்கள் ஜனாதிபதிக்கு கையளித்தோம். இந்த அறிக்கையை பிரதமருக்கு, மனிதஉரிமை ஆணையத்திற்கு கையளித்திருந்தோம். இந்த அறிக்கையை ஐநா விற்கும் கையளித்திருந்தோம். கையளித்துவிட்டு இதுதொடர்பாக நாங்கள் உரையாடுவதற்கு சந்தர்ப்பதை தாருங்கள் என்று கேட்டோம். யாருமே தரவில்லை.

இந்த அறிக்கையில் கிட்ட 39 பேருடைய வழக்குகள் இருக்கின்றன. எங்களுடைய அமைப்பிலே சட்டத்தரணிகள் கிடையாது. ஏனென்றால் சட்டத்தரணிகளை நம்பி நாங்கள் இதனை செய்யவில்லை. என்ஜியோக்களை நம்பி நாங்கள் இதனை செய்யவுமில்லை. சட்டத்தரணிகள் சட்டநுணுக்கங்களைக் கொண்டுபோய் எப்போது விடுதலை செய்யலாம் என்று பார்க்கின்றார்கள். அதன் காரணமாகத்தான் இவ்வளவு காலம் எடுத்துக்கொண்டிருக்கின்றது. என்ஜியோக்கள் இதனை வைத்து உழைத்துக் கொண்டிருக்கின்றார்கள். சட்டத்தரணிகளும் என்ஜியோக்களும் இணைந்தும் செயற்படுகின்றார்கள். எனவே அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பு என்பது சட்டத்தரணிகளை உள்வாங்கவுமில்லை, என்ஜியோக்களை உள்வாங்கவுமில்லை, அரசியல் கட்சிகளையும் உள்வாங்கவுமில்லை. இது மக்கள் சக்தியோடு மக்கள் குரலாக வீதியிலே ஒலித்துக் கொண்டிருக்கின்ற ஒரு குரல். உங்கள் மத்தியிலே இந்த விடயம் சம்பந்தமாக கலந்துரையாடுவது தொடர்பில் இந்த சந்தர்ப்பத்திற்கு நன்றி கூறுகின்றேன்.

நீதி அமைச்சர் இத்தனை பேர்தான் உள்ளே இருக்கின்றார்கள் என்று கூறுகின்றார். அவர் கூறிய பின்னர் நாங்கள் தகவல் அறியும் சட்டத்தின் கீழ் எத்தனை பேர் இருக்கின்றார்கள் என்பதை அறிவதற்காக ஒரு விண்ணபப்பப்படிவத்தை கொடுத்தோம். அதற்கேற்ப எங்களுக்கு வழங்கப்பட்டது 135 பேர் இருக்கின்றார்கள் என்று. இப்பொழுது புனர்வாழ்வு, விடுதலை என்று கூறப்பட்டு வழக்குகள் முடிவடைந்த நிலையில் 108 பேர் உள்ளே இருக்கின்றார்கள். 108 பேர் உள்ளே இருக்கின்ற நிலையில் தான் அரசியல் கைதிகள் என்று யாரும் இல்லை என்று ஜனாதிபதி லண்டனில் போய் கூறிக்கொண்டிருக்கின்றார்.

அரசியல் கைதிகளை விடுதலை செய்யும் தேசிய அமைப்பாக கடந்த மே தினத்திற்கு முன்னதாக கூடி தெற்கில் இருந்த முற்போக்கு சக்திகளுக்கும், இடதுசாரி தொழில் சங்கங்களுக்கும் நாங்கள் கடிதம் ஒன்று கையளித்தோம். நீங்கள் உங்களுடைய மே தின மேடையிலே இந்த நாட்டில் அரசியல் கைதிகள் இருக்கின்றார்கள். அவர்களை விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கையை முன் வையுங்கள் என்று கூறினோம். அதற்கேற்ப தெற்கிலே அந்த மேடையிலே அவர்கள் அரசியல் கைதிகளை விடுதலை செய்யுங்கள் என்ற கோரிக்கையை முன் வைத்தார்கள். இது எங்களுக்கு கிடைத்த வெற்றியாகத் தான் கருதுகின்றோம். தெற்கிலே இருக்கின்ற இடதுசாரிகளும், முற்போக்கு சக்திகளும் அரசியல் கைதிகள் இந்த நாட்டில் இருக்கின்றார்கள் என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். இந்த நிலையிலே நாங்களும் அவர்களும் கைகோர்க்க வேண்டிய தேவையில் இருக்கின்றோம். குறிப்பாக மக்கள் விடுதலை முன்னணியினர் இந்த யுத்தத்தை கொண்டு நடத்துவதற்கு முழு மூச்சாக ஒத்துழைப்பை வழங்கியவர்கள். அவர்களும் கூட அரசியல் கைதிகளை விடுதலை

செய்யுங்கள் என்று கூறினார்கள் என்றால் அது எங்களுக்கு கிடைத்த வெற்றியாகவே கருதமுடியும்.

இறுதியாக பார்வையாளர்கள் தரப்பில் இருந்து கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கான பதில்களும் ஆரோக்கியமான உரையாடலாக இருந்தன. சில பகுதிகளை இங்கே தருகிறோம்:

♦ **வடக்கு கிழக்கில் இருக்கின்ற மக்கள் அரசியல் கைதிகள் விடயத்தை எவ்வாறு பார்க்கின்றார்கள்?**

**அருட்தந்தை சக்திவேல்:** தமிழ் மக்களின் அரசியலை ஏற்றுக் கொண்ட தமிழ் சமூகம் எங்களுக்கு தேவை. அந்த தமிழ் சமூகத்தை பத்திரிகைகளில் காண்கின்றோம். ஆனால், நடைமுறையில் காண முடியாமல் இருக்கின்றது. காணாமல் ஆக்கப்பட்டோர் விடயத்தை எடுத்துக் கொண்டாலும் கூட அந்தக் குடும்பத்தார் தாய்மார்கள் வீதிகளில் அமர்ந்திருக்கின்றார்களே தவிர, எத்தனையோ பேர் அந்த வீதியாலே பயணித்துக் கொண்டிருக்கின்றார்கள். அவர்கள் சிறிது இறங்கி அந்த போராடும் மக்களை பார்ப்பதோ அவர்களோடு பேசுவதோ கிடையாது. காணாமல் ஆக்கப்பட்டவர்கள் பேரணிகள், போராட்டங்கள் நடாத்தும் போது அந்தப் பிரதேசம் சார்ந்தவர்களைக் கூட காண முடியாமல் இருக்கின்றது. ஆனால் தமிழ் சமூகம் இந்தப் பிரச்சினைகளை எல்லாம் தங்களிடத்தில் இருந்து தூர வைக்கும் நிலைப்பாட்டுக் குள்ளே தள்ளப்பட்டிருக்கின்றது. இது தான் இன அழிப்பின் உச்சக் கட்டம்! 2009 ஆம் ஆண்டு இனவழிப்பின் உச்சக் கட்டமல்ல! எங்களை எங்கள் பிரச்சினைகளில் இருந்து தூரமாக்குகின்ற மனநிலையினை உருவாக்கி அந்த மனநிலைக்குள்ளே எங்களை வைத்திருப்பதைத் தான் இனவழிப்பின் உச்சக் கட்டம் என்று நான் கூறுகின்றேன். இதற்குத் தான் இப்போது மருந்து தேவை.

அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் தமிழ் சமூகம் அக்கறை காட்டாது விட்டால், அடுத்து ஒரு போராட்டத்துக்கு எம் இளைய சமூகம் முன்வரும் என்பதனை நாம் எதிர்பார்க்க முடியாது. இப்போது உள்ளே இருக்கின்றவர்கள் பாதிக்கப்பட்ட அவர்களுடைய குடும்பத்தார் ஆகியோர்களுக்கு வெளியே இருக்கின்றவர்கள், இந்த அரசியல் சமூகம் ஒரு பாதுகாப்பை கொடுக்காது என்கின்ற மனப்பான்மைக்குள் வந்தால் அடுத்த ஒரு போராட்டத்துக்கு யாரும் ஆயத்தமாக மாட்டார்கள். இந்த அரசாங்கங்கள் எங்களுக்கு தேவையானவற்றை கொடுக்கப் போவதில்லை. ஆகவே, அடுத்து ஒரு போராட்டம் தேவை. இந்த அரசாங்கம் கூட அடுத்த தேர்தலுக்காக ஆயத்தப்படுகின்றார்களே தவிர தமிழ்மக்களுடைய அரசியல் தீர்வுக்கு ஆயத்தப்படுத்தக்கூட இல்லை. ஆகவே, நாங்கள் அரசியல் கைதிகளை உள்ளே வைத்துக் கொண்டு என்ன மாதிரியான செயற்பாட்டுக்குள் இறங்கப் போகின்றோம் என்பதே கேள்வி.

♦ **அரசியல் கைதிகள் தொடர்பில் எங்களால் கட்டமைக்கப்பட்டு எதுவும் செய்ய முடியாமல் இருப்பதற்கான தடைகள் என்ன?**

**குமாரவடிவேல் குருபரன்:** நாங்கள் அரசியல் கைதிகளினுடைய பொருளாதார நிலைமை, மறுவாழ்வு நிலைமை தொடர்பில் எந்தவித காத்திரமான நிலைப்பாடும் எடுக்கவில்லை என்பது மீள மீள தமிழ்ச் சமூகம் பல்வேறு தளங்களில் எதிர் நோக்குகின்ற விமர்சனமாகும். நாங்கள் காத்திரமான அமைப்பு ரீதியான செயற்பாடுகளை இன்னும் செய்யத் தொடங்கவில்லை. 108 அரசியல் கைதிகளும் யார் என்பதனை அறிந்து கொண்டு, அவர்கள் எந்தெந்த நீதிமன்றங்களில் அந்த வழக்குகளை எதிர்கொள்கின்றார்கள். அந்த நீதிமன்றங்களில் அவர்களுக்கு சட்டத்தரணிகள் இருக்கின்றார்களா? இல்லையா? அந்த அரசியல் கைதியின் குடும்பம் எங்கே உள்ளது? அவர்களுடைய பொருளாதார நிலை என்ன? அந்தப் பொருளாதார நிலையை உயர்த்துவதற்கு ஏதாவது நடவடிக்கை எடுக்கலாமா? அப்படியான விடயங்களை பார்ப்பதற்கு கூட எங்களுக்கு நேரமில்லாமல் இருக்கிறது என்பது உண்மையில் ஆச்சரியமாகவும் இருக்கின்றது. மாவீரர் குடும்பங்களைப் பற்றிக் கதைப்பதென்றால் அது ஒரு பெரிய அளவிலான நடவடிக்கை. ஆனால் அரசியல் கைதிகள் எண்ணிக்கையே 108 தான். சிறப்பாக முகாமைத்துவம் செய்யக்கூடிய அளவிலான தொகையினரை கூட நாங்கள் கண்டுகொள்ளாமல் இருப்பது நிதர்சனமானது. ஒரு விடயத்தை நாங்கள் ஏற்றுக் கொண்டே ஆக வேண்டும். தமிழர்கள் அமைப்பு ரீதியாக சிந்திப்பதற்கும், அமைப்பு ரீதியாக நடவடிக்கை எடுப்பதற்கும் சரியாக நலிவடைந்த நிலையில் இருக்கின்றோம்.

♦ **அரசியல் கைதிகளின் விடயத்தில் அவர்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கில் தான் மாணவர்கள் அனைவரும் போராடியிருந்தோம். ஆனால், அதற்கு சரியான தீர்வு தான் கிடைக்கவில்லை. ஏனென்றால் இதற்கொரு சரியான வழிகாட்டல் இல்லை என்பது தான். எங்களுக்கு முந்தைய காலங்களில் பல்கலைக்கழக மாணவர்கள் சரியான முறையில் வழி நடாத்தப்பட்டதாக கேள்விப்படுகின்றோம். இப்போது போராட்டங்களை முன்னெடுப்பதற்கு சரியான வழி காட்டல்கள் இல்லை என்பது தான் காரணம். எங்களது வீட்டில் உள்ளவர்களில் இருந்து எல்லாருமே சுயநலம் மிக்கவர்களாக தான் இருக்கிறார்கள். நாங்கள் போராட்டத்தில் முன்னின்றதற்கு வீட்டில் நிறைய பேச்சு வாங்கியிருக்கின்றோம். மாணவர்கள் சிலர் உணர்ச்சிவசப்பட்டு போராட்டத்தை முன்னெடுக்கின்ற நிலையில் இந்தப் போராட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு வழி உள்ளதா?**

**குமாரவடிவேல் குருபரன்:** மிக முக்கியமான கேள்வி. காலத்தின் தேவை கருதிய கேள்வியாகவே நான் இதனை பார்க்கிறேன்.

பல்கலைக்கழக மாணவர்கள் காலம் காலமாக பொதுப் பிரச்சினைகளில் முன்னாலிருந்து போராடி இருக்கின்றார்கள். இந்த நீண்ட பாரம்பரியத்தில் இருந்து நீங்கள் வருகின்றீர்கள். அது வரவேற்புக்குரியது. ஆனால், பல்கலைக்கழக மாணவர்களுடைய போராட்டம் ஒரு வித்தியாசமான போராட்டமாக இருக்க வேண்டும் என நான் விரும்புகிறேன். 70, 80 களில் இங்கே இருந்த சூழல் எதனைச் செய்திருக்கும் என்றால், ஒரு பிரச்சினை வருகின்றதென்றால் அதைப்பற்றி ஆழ அகலமாக விசாலமாக உரையாடி இருப்போம். சில நேரங்களில் பேராசிரியர்களும் வந்திருப்பார்கள், சில வேளை சிரேஷ்ட மாணவர்களும் வந்திருப்பார்கள். அந்த உரையாடல்களின் இறுதியில் சில தீர்க்கமான முடிவுகளுக்கு வந்திருப்பார்கள். என்று தான் நாங்களும் கேள்விப்படுகின்றோம். ஆனால் எந்த நடவடிக்கையாகவும் இருக்கலாம். அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டமாகவும் இருக்கலாம், முள்ளிவாய்க்கால் நினைவேந்தலாகவும் இருக்கலாம். இவை தொடர்பில் மாணவர்களுக்கு இடையிலேயாவது ஒரு ஆழமான உரையாடலை நடத்தியிருக்கலாம். பல மணி நேரங்கள் உரையாடல் நடத்திக் கூட தீர்க்கப்பட முடியாத விடயங்கள் இவை. ஆனால், இவற்றுக்காக நாங்கள் ஒரு மணித்துளி கூட செலவிட்டதில்லை. அரசியல் கைதிகளுக்கு ஆதரவான போராட்டம் மாணவர்களால் முன்னெடுக்கப்பட்ட போது சர்வதேச மனிதாபிமான சட்டத்தில் மிக ஆழமான நிபுணரான கனேடியப் பேராசிரியர் ஒருவர் இங்கு வந்திருந்தார். 'அரசியல் கைதிகள் தொடர்பிலான சர்வதேச சட்ட நிலைமை' என்ன என்பதனை அறிவதற்காக அவர்களை உரையாற்ற நாங்கள் கூப்பிட்டிருந்தோம். அந்த உரையாடலில் 4 பல்கலைக்கழக மாணவர்கள் தான் பங்குபற்றி இருந்தார்கள். அது தான் இன்று பல்கலைக் கழகத்தில் இருக்கக் கூடிய சூழல். நாங்கள் உரையாடல் வெளிகளை அதிகரிக்க வேண்டும். அந்த மாதிரி வெளிகளில் நானோ அல்லது அருட்தந்தையோ வரவேண்டுமென்ற அவசியம் கூட இல்லை. மாணவர்களே உரையாடலை முன்னெடுக்கலாம்.

ஆனால், உரையாடல் கூட இல்லாமல் செயற்பாட்டு வெளிக்குப் போனால் நாங்கள் பல்கலைக்கழகம் தானா என்கிற கேள்வி எனக்குள் எழுகின்றது. அது மீள உயிர்ப்பு பெறுவது இந்தப் பல்கலைக்கழகம் நிமிர்வதற்கு ஒரு நல்ல வாய்ப்பை வழங்கும். இப்படி ஒரு கேள்வி ஒரு மாணவனிடம் இருந்து தன்னியல்பாக வருவதை இன்றைய நாளில் நான் பெற்ற மிகப்பெரிய சந்தோசமாக கருதுகிறேன்.

♦ **இந்தக் கலந்துரையாடல் நடத்தியதன் விளைவு என்ன?**

**குமாரவடிவேல் குருபரன்:** சிந்தனைக்கான செய்திகளை சொல்வது தான் இந்தக் கலந்துரையாடலின் நோக்கம். அது போதுமற்றதென நீங்கள் நினைக்கலாம். ஆனால், செயற்பாட்டிற்கான புள்ளிகள் அடையாளம் காணப்பட்டிருக்கின்றன. செயற்பாடுகளை முன்னெடுக்கக் கூடிய நபர்கள் இந்தக் கூட்டத்தில் இருக்கின்றார்கள். எமது அடையாளம் அமைப்புக்கும் சில பொறுப்புக்கள் உள்ளது. தொடர்ந்தும் விதைப்போம்.

---

**(3 ஆம் பக்கம் தொடர்ச்சி)**

தென்னிந்தியாவின் தமிழ்நாடு, கேரளா ஆகிய மாநிலங்களிலும் சுட்ட சுண்ணாம்பின் நீர் பதநீர் சேகரிக்கத் தொங்க விடப்பட்டுள்ள மண் பானைகளின் உட்புறம் தடவப்படுகிறது. 1 லீட்டர் பதநீர் எடுப்பதற்கு 2.5 கிராம் சுண்ணாம்பு பானையில் தடவினால் போதுமானது. இதன் மூலம் நொதித்தல் தடுக்கப்படுகிறது. கலப்படமற்ற பதநீரில் சுண்ணாம்பு கலந்திருப்பினும் பதநீர் பருகலாம். சுண்ணாம்பு சேர்ப்பதால் சுவை கூடுகிறது.

பதநீர் பலவிதமான நோய்களை தீர்க்கும் மருந்தாக உள்ளது. பதநீரிலுள்ள சீனிச் சத்து உடலுக்கு தேவையான வெப்பத்தை தருகிறது. இதிலிருக்கும் குளுக்கோஸ் மெலிந்து தேய்ந்து வாடிய உடலுடைய குழந்தைகளின் உடலை சீராக்கி வலுவாக்குகிறது. கருவுற்ற பெண்களுக்கும் மகப்பேற்று பெண்களுக்கும் ஏற்படுகின்ற மலச்சிக்கல், வயிற்றுப் புண் முதலியவைகளை குணப்படுத்துகிறது. இரத்த அழுத்தத்தை சீராக்குகிறது. இதை அருந்துவதால் இருதய நோய் குணமாகும். இருதயம் வலுவடையும். இதிலிருக்கும் கல்சியம் பற்களை உறுதிப்படுத்தி, ஈறுகளில் ரத்தக்கசிவு ஏற்படுவதை தடுப்பதோடு பற்களின் பழுப்பு நிறத்தையும் மாற்றுகிறது. இதிலிருக்கும் இரும்புச்சத்து பித்தத்தை நீக்கி சொறி, சிரங்கு உள்பட சகல தோல் நோய்களையும் நீக்குவதுடன் கண் நோய், இருமல், கசநோய் இவைகளையும் நீக்குகிறது. மேலும் பதநீரானது சலரோகம், இரத்தக் கடுப்பு, அதிக உஷ்ணம், பசியின்மை, வயிற்றுப்புண், வாய்வு சம்பந்தமான நோய்களையும் குணப்படுத்துகிறது என இயற்கை மருத்துவ நிபுணர்கள் ஆராய்ந்து கூறியுள்ளனர்.

இந்த பதநீரில் சோறு சமைக்கலாம், கொழுக்கட்டை தயாரிக்கலாம். "பனை இருந்தாலும் ஆயிரம் பொன், பனை இறந்தாலும் ஆயிரம் பொன் தான்" இது எங்கள் புதுமொழியாகும். பனை விதையிலிருந்து மரமாகி, கீழே விழும் வரை எல்லா வகையிலும் பயன்தரும் என்பது நிதர்சனம்.



# வலிகாமம் வடக்கில் மீளக் குடியேறலில் உள்ள சவால்கள்

முனைவன்

யாழ்ப்பாணம் – வலிகாமம் வடக்கில் மீள்குடி யேறுவதற்கான அனுமதி வழங்கப்படுகின்ற போதும் மீள்குடியேறுவதற்கு ஆர்வமாகவுள்ள மக்களுக்கு உதவித் திட்டங்கள் வழங்குவதில் காலதாமதம் ஏற்படு கின்றது. இது நல்லிணக்க அரசாங்கத்தின் ஸ்திரமற்ற தன்மையினைக் காட்டுகின்றது.

நல்லாட்சி அரசாங்கம் என்று சொல்லி ஆட்சிபீடம் ஏறிய அரசாங்கம் வட கிழக்கு மக்களுக்கு ஆக்கபூர்வமாக எவ்விதமான செயற்றிட்டங்களையோ, உதவிகளையோ செய்யவில்லை. மாறாக தமிழ் மக்களை தொடர்ந்தும் ஏக்கநிலைக்குள் வைத்திருப்பதனையே விரும்புகின்றது. வலிகாமம் வடக்கில் அண்மையில் 683 ஏக்கர் காணிகள் விடுவிக்கப்பட்ட நிலையில் அதற்குப் பின்னர் 40 ஏக்கர் அதனைத் தொடர்ந்து 36 ஏக்கர் காணிகளை விடுவித்துள்ளது. எனினும் குறித்த பகுதிகள் விடுவிக்கப் பட்ட போதும் அரசாங்கத்தின் உதவித்திட்டங்கள் முழுமையாக ஆரம்பிக்கப்படவில்லை என்பதே தற்போதைய குற்றச்சாட்டாக உள்ளது.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் யுத்தத்தின் பின்னரான சூழலில் நல்லிணக்க அரசாங்கத்தின் ஆட்சிக்குப் பின்னர் மக்களுக்குத் தேவையான எந்தவொரு விடயத்தையும் ஆக்கபூர்வ மாக செய்யவில்லை. குறிப்பாக காணாமல் ஆக்கப் பட்டவர்களுக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் ஒரு தீர்க்கமான முடிவில்லை. தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை தொடர்பில் எதுவித பதிலும் இல்லை. உயர்பாதுகாப்பு வலய விடுவிப்புக்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்து நலன்புரி நிலையங்களில் மற்றும் உறவினர் நண்பர்கள் வீடுகளில் தங்கியுள்ள மக்கள் சொந்த இடங்களில் மீள்குடியேறுவதற்கான நடவடிக் கைகள் எவையும் முழுமையாக நடைமுறைப்படுத்த வில்லை.

மேற்குறித்த விடயங்கள் தொடர்பில் வடக்கு மாகாணசபை கூட ஆக்கபூர்வமான நடவடிக்கை எடுக்க வில்லை என்றே கூறவேண்டியுள்ளது. மாகாணசபைக்கும் ஆயுள்முடிவடையவுள்ள நிலையில் இருக்கின்ற நான்கு மாதங்களில் அடுத்த தேர்தலுக்காக உள்ளே வரவேண்டும் என்பதற்காக அமைதிப்போக்கை கடைப்பிடித்து வருகிறது. இதன் வெளிப்பாடு தான் ஆனி மாதம் நடைபெற்ற மாகாணசபை அமர்வு நண்பகல் 12.30 மணியுடன் வேறு விடயங்கள் இல்லாமையால் ஒத்திவைக்கப்படுவதாக கூறி ஒத்திவைக்கப்பட்டது. வடக்கு மாகாண சபையால் பல விடயங்களை செய்யக் கூடியதாக இருந்தும் அதனை பற்றிய செயற்பாடு இல்லாது தேவையற்ற விடயங்களில மூக்கை நுழைத்து வருகிறது.

குறிப்பாக வடக்கின் மீள் குடியேற்றம் தொடர்பில் எத்தனை உறுப்பினர்களுக்கு மீள்குடியேற்றம் தொடர்பான விபரங்கள் தெரியும்? விடுவிக்கப்படும் இடங்களுக்கு எத்தனை பேர் சென்று பார்திருக்கிறார்கள்? வடக்கு மாகாண முதலமைச்சர் விடுவிக்கப்பட்ட மயிலிட்டிக்கு சென்று பார்வையிட்டார் என்றே ஊடகங்களில் படங்களும், செய்திகளும் வெளியாகியிருந்தன. அவர் எந்த இடத்தில் எத்தனை மக்களை சந்தித்தார்? குறைகளை கேட்டறிந்து நடவடிக்கை எடுத்தாரா? மயிலிட்டியில் விடு விக்கப்பட்டுள்ள இடங்களை இயலுமானளவு பார்வை யிட்டாரா? குறித்த இடத்தில் விடுவிக்கப்பட்ட கோயில் ஒன்றைப் பார்வையிட்டு விட்டு திரும்பிச் சென்றவர் அதற்குப்பின் ஆக்கபூர்வமான செயற்பாடுகள் எதனையும் வடக்கு மாகாணசபையில் முன்னெடுக்கவில்லை. இவ்வாறான சூழலே தற்போதும் மாகாணசபையில் உள்ளது.

மீள்குடியேறுவதற்கான காணி விடுவிப்புக்கள் ஆங்காங்கே நடைபெற்று வருகின்ற போதும் அத்தகைய காணிகள் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. இவ் வாறான சூழலில் விடுவிக்கப்பட்டிருந்த இடங்களைப் பார்க்கும் போது காடுகள் பற்றிப் பரந்து காணப்படு வதுடன் அங்கிருந்த வீடுகள், பொது மண்டபங்கள், ஆலயங்கள், பாடசாலைகள் ஆகியவை இடித்து தரை மட்டமாக்கப்பட்ட நிலையிலேயே காணப்படுகின்றன.

நிரந்தரமாக காணப்பட்ட வீதிகள் மூடி மறைக் கப்பட்டு புதிய வீதிகள் இராணுவத்தினரால் அமைக்கப் பட்டு அவையே ஆரம்பகால வீதிகள் போல காட்சி தருகின்றன. இது மட்டுமன்றி மக்கள் பாவித்து வந்த கிணறுகள் மூடப்பட்டுள்ளதுடன் மக்களின் வீடுகளுக் குள் புதிய கட்டடங்கள் கட்டப்பட்டு அவை சமையல் அறைகளாக பயன்படுத்தப்பட்டுள்ளன. ஒரு சில பகுதி களில் மண் குடிசையிலான வீடுகளைக் கட்டி உல்லாச விடுதிகள் போன்று பயன்படுத்தி உல்லாச வாழ்க்கை வாழ்ந்து வந்தமையை அவதானிக்கக் கூடியதாக வுள்ளது. இத்தகைய சூழலே வலிகாமம் வடக்கு மீள்குடி யேற்றப் பகுதிகளில் காணப்படுகின்றது.

மீளக்குடியேற அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் ஆர்வத்துடன் பார்வையிடச் செல்லும் மக்கள் ஒரு சில மரங்கள் மற்றும் வீதிகள் கட்டடங்கள் சிலவற்றை கண்டே தமது வீடுகள் காணிகளை அடையாளம் கண்டு வரு கின்றார்கள். ஒரு சில குடும்பங்கள் தமது வசதிக்கேற்ப உடனடியாகவே தமது காணிகளை அடையாளம் கண்டு எல்லைகளை அடைப்பதும் அடையாளப்படுத்தும் வேலைகளை வேகமாக செய்து வருகின்றார்கள்.

இதேவேளை விடுவிக்கப்படும் இடங்களில் மிச்சமாக இருக்கின்ற பொருட்களை கொள்ளை அடிப்பதில் கொள்ளையர்கள் தீவிரமாக ஈடுபட்டு வரு கின்றார்கள். இவர்களுக்கு சில இராணுவம் மற்றும் பொலிஸார் உடந்தையாகவும் செயற்பட்டு வருகிறார்கள். மக்கள் பயன்படுத்தி விட்டுச் சென்ற ஒருசில பகுதிகளில் உள்ள ஓடுகள், கதவுகள், நிலைகள், ஜன்னல்கள், இயந்திரங்கள், இரும்புக்கம்பிகள், கேடயங்களை இவ்வாறானவர்கள் கொள்ளையடித்துச் சென்று விற்று அதிக இலாபம் ஈட்டி வருகின்றார்கள். ஆலயங்களில் உள்ள சிலைகள் ஐம்பொன் விக்கிரகங்களையும் இக் கொள்ளையர்கள் விட்டு வைக்கவில்லை.

இவ்வாறான சூழ்நிலையிலேயே வலிகாமம் வடக்கில் மீள்குடியேற அனுமதிக்கப்பட்ட இடங்களில் மீள்குடியேறுவதற்காக கிராம அலுவலரிடம் தமது உறுதியுடன் காணி விபரங்களை முழுமையாக பதிவு செய்து வருகின்றார்கள். தமது காணிகளில் உள்ள மரங்கள் பொருட்களை ஏற்றுவதாயின் பிரதேச செயலகத்தில் அனுமதியைப் பெற்று ஏற்றிச்செல்வதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அரசசார்பற்ற நிறுவனம் கண்ணிவெடி தொடர்பான விளக்கங்களை வழங்கி வருகின்றது.

விடுவிக்கப்பட்டவுடன் எத்தகைய தேவைகள் செய்ய வேண்டும் என்பதில் துறைசார் திணைக்களங் களூடாக தரவுகளை பெற்று பிரதேசசபை, பிரதேச செயலகம் கணக்கெடுத்து வருகிறது. இதுமட்டு மன்றி காணிகள். வீதிகள், பாதைகள், வீடுகளை அடை யாளம் கண்டு அடையாளப்படுத்தி வருவதுடன் வீதிகள் பாதைகளை கனரக வாகனங்களின் மூலம் அகற்றி வருகிறது. விடுவிக்கப்பட்ட பகுதிகளில் மக்கள் மீளக்குடி யேறுவதற்கு பதிவுகளை செய்து வருகின்றனர். இம் மக்களுக்கு வாழ்வாதார உதவிகள் வீட்டுத்திட்டங்கள் போன்றவை உடனடியாக வழங்கப்படுமேயானால் தாம் உடனடியாகவே மீள்குடியேறுவோம் என உறுதியாக கூறுகின்றார்கள். எது எவ்வாறு இருந்தாலும் யாழ் மாவட்டத்தின் மீள்குடியேற்றத்தைப் பொறுத்தவரையில் பல இடங்கள் விடுவிக்கப்பட மாட்டாது என கூறப்பட்டது. அதனை வைத்தே பல அரசியல் கூத்துக்களும் இடம்பெற்று வந்தன. எனினும் விடுவிக்கப்படாது என கூறப்பட்ட இடங்கள் பல விடுவிக்கப்பட்டுள்ளன. எவ்வாறானாலும் விடுவிக்கப்பட்ட இடங்களில் மக்கள் மீளக் குடியேறு வதற்கு விரைவான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கு தொடர்ச்சியான அழுத்தங்கள் வேண்டும்.

---

நிமிர்வு இதழை சனசமூக நிலையங்களுக்கும் நூலகங்களுக்கும் இலவசமாகவே விநியோகித்து வருகின்றோம். இதுவரை நிமிர்வு இதழ் கிடைக்கப் பெறாத சனசமூக நிலையங்கள், நூலகங்கள் நிமிர்வு அலுவலகத்தை தொடர்பு கொள்ளும் பட்சத்தில் அவர்களுக்கு நிமிர்வு இதழை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தெரிவித்துக் கொள்கின்றோம்.

- ஆசிரியர்-

## நிமிர்வு வாசகர்களே

தொடர்புகளுக்கு...

தபால் முகவரி:
தமிழ் ஊடகத் திரட்டு,
லக்சுமி கட்டிடம்,
ஞானபாஸ்கரோதய சனசமூக நிலைய வீதி,
கல்வியங்காடு, யாழ்ப்பாணம்
தொ.பே.இல : 021 223 2121
மின்னஞ்சல் முகவரி: nimirvueditor@gmail.com

# சலிக்கும் வாழ்க்கை !

நிமிர்வுகள் - 13

நெம்பு

## அப்புக்காத்தரும்... அன்னமாக்காவும்...

இப்ப நிறையச் சனங்களிற்கு வாழ்க்கையில பிடிப்பு இல்லாமல் போய்க்கொண்டிருக்கு...

ஓமோம்.. அதெண்டாச் சரிதான்...

ஆனா ஏன் அப்படி என்று தான் தெரியேல்லை...

வர வர எல்லாருக்கும் வாழ்க்கையில பிடிப்பு இல்ல, சலிப்புத்தான் மிச்சம்...

அப்ப போர்க்காலத்தில எல்லாரும் உயிரைக் கையிலை பிடிச்சுக் கொண்டு அதைக் காப்பாற்றத்தான் ஓடிக்கொண்டிருந்தவை...

இப்ப எல்லாரும் உயிரைக் கயித்தில பிடிச்சுக் குடுக்கவெல்லோ திரியுதுகள்...

ஏன் இப்படிப் போச்சுதுகளோ தெரியேல்லை...

பொசுக்கெண்ட முதல் கயித்தில தொங்குதுகள், இல்லாட்டி நெருப்பில குதிக்குதுகள்..

தப்பி இருக்கிறதுகளும் ஏனோ தானோ என்று மன அழுத்தத்திலும் விரக்தியிலுமே வாழ்க்கையை ஓட்டிக்கொண்டிருக்குதுகள்...

எல்லாம் இருந்தும் ஒண்டும் இல்லை எண்ட நிலை தான்..

என்ன அது எனக்கு விளங்கேல்லை...

முன்னையவிட இப்ப எல்லாரும் வசதி வாய்ப்பாய்த் தானே வாழுறம்...

ஓமோம்...

ஆனா... அதுகளைச் சந்தோசமாய் அனுபவிச்சு வாழத்தெரியேல்லை...

ஓமோம்.. எப்பவும் கிடைக்காதைப் பற்றியே கவலைப்பட்டுக் கொண்டு திரியுறம்..

ஓம்... உது தான், இருக்கிறதை விட்டிட்டுப் பறக்கிறதைப் பிடிக்கப்போய் பள்ளத்தில விழுகிறதென்பது...

பிரச்சினைகளை இலகுவாக கையாள சிறுவயதில இருந்தே பழக்கவேணும்..

நாங்கள் எங்க கையாளப் பழக்கிறம்.. பிரச்சினைகளைக் கண்டா விலகி ஓட எல்லோ பாக்கிறம்..

அந்த ஓட்டத்தின்ர உச்சக் கட்டம் தான், உலகத்தை விட்டே ஓடுறது...

## அன்பே பிரபஞ்சம்



அன்பிற்கு இங்கே பஞ்சம்...- பொல்லா
வேதனைகளில் மனம் தஞ்சம்...
தடைகளைத் தாண்ட முயலாத
வாழ்க்கைப் பயணங்கள்
மரணங்களில் சென்று மாழும்...

உறவுகள் உண்டு உறவின்றி...
இரவுகள் நீளும் உறக்கம் இன்றி...
மொழிகள் மௌனிக்கும் கேட்பாரின்றி...
மனங்கள் பேதலிக்கும் மகிழ்ச்சியின்றி...

சலிக்கும் வாழ்வுதனை
சாதனையாக்கும் வழியென்ன..?
வலிக்கும் வாழ்க்கைக்கு
வண்ணம் பூசுவதெப்படி..?

அன்பு தான் வழி...
வலி போக்கும் வழி...
எதனையும் எதிர்பாரா அன்பினை வளர்ப்போம்...
மட்டற்ற அன்பால் மனிதர்களை இணைப்போம்...
ஆணவம் விலக, உறவுகள் சேரும்...
புரிதல்கள் கூடின் பிரிவுகள் மறையும்...

சரியும் பிழையும் அவரவர் நோக்கு...
சரி பிழையாகும்... பிழை சரியாகும்
காலத்தின் போக்கில்
அனைத்தும் சமனாகும் - அன்பினால் பார்க்கின்...

ஆதலால்,
அச்சங்கள் தவிர்ப்போம்...!
அன்பினால் நிறைப்போம் - அவனிதனை
மனங்களின் மாண்பினால்,
மகிழ்ச்சிகள் காண்போம்...!

# தமிழர்களின் இருப்பைச் சிதைக்கும் கொழும்பு அரசாங்கம்






மட்டக்களப்பு மாவட்டத்தின் செங்கலடி பிரதேசத்தில் உள்ள பெரிய புல்லுமலை கிராமசேவையாளர் பிரிவில் உள்ள கும்புறுவெளி என்ற இடத்திலே குடிநீரை போத்தலில் அடைக்கும் மஹா மினரல் வோட்டர் தொழிற்சாலை அமைக்கப்பட்டு வருகிறது. பொதுமக்களின் எதிர்ப்பையும் மீறி கொழும்பு அரசாங்கத்தின் பூரண ஆசீர்வாதத்துடன் மட்டக்களப்பில் உள்ள சில அதிகாரிகளின் ஒத்தாசையோடும் இது நடக்கிறது. இதற்கு எதிராக கிழக்கு தமிழ் மக்கள் தங்கள் கடுமையான எதிர்ப்புக்களை பதிவு செய்து வருகின்றனர். பூர்வீகமாக தமிழர்கள் வாழ்ந்து வரும் புல்லுமலையில் நிரந்தரமாக குடிதண்ணீரை இல்லாமல் செய்வதற்கான நடவடிக்கைகளே இதனூடாக முடுக்கி விடப்பட்டுள்ளன.

இதேவேளை மட்டக்களப்பு ஏறாவூர்பற்று பிரதேச சபை ஒருங்கிணைப்புக்குழுக் கூட்டம் கடந்த 11.06.2018 அன்று இடம்பெற்ற போது அமைக்கப்பட்டு வரும் குடிநீர் தொழிற்சாலை இயங்குவதற்கு அனுமதி அளிக்கப்படவில்லை என ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. இதேவேளை 12.06.2018 அன்று குறித்த தொழிற்சாலை அமைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து பொதுமக்களால் பாரிய ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இக்கிராமத்தில் 100 ஏக்கருக்கு மேற்பட்ட காணிகளை சிலர் ஆக்கிரமித்து அக்காணியில் 25 ஏக்கர் நிலப்பரப்பில் நாள் ஒன்றிற்கு இருபது ஆயிரம் லீற்றர் நீரை உறிஞ்சி போத்தல்களில் அடைத்து விற்பனை செய்யும் தொழிற்சாலை ஒன்றை நிறுவுவதற்கு முயற்சிக்கின்றார்கள். பெருந்தேசிய வணிகர்களின் இந்நடவடிக்கை மூலம் பாரம்பரிய தமிழ்க் கிராமத்தை சுடுகாடாக மாற்றும் திட்டம் மெல்ல மெல்ல முன்னெடுக்கப்படுகிறது.

தன்னுடைய 85 ஏக்கர் காணியை ஆக்கிரமித்து தொழிற்சாலைக்கான கட்டிடம் கட்டப்பட்டு வருவதாகவும் அந்த உறுதி 1985ஆம் ஆண்டு மட்டக்களப்பு மாவட்ட காணித்திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டிருப்பதாகவும் அக்காணிக்கு சொந்தமான தமிழர் ஒருவர் பிரதேச செயலாளரிடம் உறுதியை காட்டியுள்ளார்.

தண்ணீர் வளம் என்பது மிகவும் முக்கியமானது. அதனை நாம் வரைமுறையின்றி நுகராமல் அளவுடன் நுகர்ந்து அடுத்து வரும் சந்ததிக்கும் பாதுகாத்து விட்டுச் செல்ல வேண்டும் என்கிற நல்லெண்ணத்துக்கு ஆப்படிக்கிறது கொழும்பு அரசாங்கம்.

கிழக்கிலும் சரி வடக்கிலும் சரி கொழும்பு அரசாங்கம் மிகத்தெளிவாக தமிழர் தாயகத்தை சூறையாடும் நடவடிக்கைகளை தனது நிறுவனங்களூடாக கனகச்சிதமாக முன்னெடுத்து வருகின்றது. கொழும்பு அரசின் அனுமதியுடன் வனவளப் பாதுகாப்புத் திணைக்களமும், புள்ளிவிபரவியல் திணைக்களமும் இணைந்தே மேற்படி காணியை அபகரித்து குடிநீர் தொழிற்சாலையை அமைக்க முன் நிற்கின்றன என அப்பிரதேச மக்கள் நேரடியாகவே குற்றம் சாட்டுகின்றனர். இதற்கு குறித்த இடத்தில் உள்ள பிரதேச செயலரிடம் அனுமதி பெறவில்லை எனக் கூறப்படுகின்றது.

தமிழ்மக்களின் இருப்பை கேள்விக்குள்ளாக்கி அவர்களை நடுத்தெருவில் அலைய விடுவது ஒன்று தான் நல்லாட்சி அரசின் நோக்கமா? விழிப்பாய் இருப்பது ஒன்று தான் தமிழ்மக்களுக்கு இன்றைய நிலையில் மிகவும் முக்கியமானது.

இந்த இதழானது தமிழ் ஊடகத் திரட்டு நிறுவனத்தினரால் 21.06.2018 அன்று ஜெயசிறீ அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.